நெல்லைத் தென்றல்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
4 JUN 1975

TNSDA
04786

பரலி, சு. நெல்லையப்பர்.

நெல்லைத் தென்றல்

2வது உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
கலைக்காட்சிக் குழு
சென்னை

ஆசிரியர் :

பரலி, சு. நெல்லையப்பர்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
4 JUN 1975

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை

பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

[விலை ரூ. 1-50

முதற் பதிப்பு : மார்ச்சு : 1966

OFFICE OF THE DIRECTOR OF ...
4786
4 JUN 1975
GOVT. OF M...

894.8112

ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1.

முகவுரை

நெல்லைத் தென்றல் என்ற இந்தக் கவி நூலில் உள்ள பாடல்கள் நான் சென்ற ஐம்பது ஆண்டுகளில் பாடிய பாடல்களில் ஒரு பகுதியாகும். சில பாடல்கள் காலப் போக்கில் மறந்து போயின. சிலவற்றை நான் வேண்டு மென்றே விட்டு விட்டேன்.

திருவாளர் வ. உ. சிதம்பரனாரின் தொடர்பு எனக்குத் தேச பக்தியும், பொதுநல ஊக்கமும் வளர்வதற்குக் காரண மாயிருந்தன. மகாகவி பாரதியாரின் தொடர்பு என்னிடம் கவிதை உணர்ச்சியும் ஆத்ம சிந்தனையும் வளர்வதற்குக் காரணமாயிருந்தன.

இந்த நூலில் அடங்கிய பாடல்களை மிகச் சிறந்த பாடல்களென்று நான் கருதவில்லை. அவை பெரும்பாலும் சொல்லடுக்குகளே யாகும். ஆயினும் 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழிக்கிணங்க நான் ஆசை காரணமாக இவற்றை வெளியிடுகின்றேன்.

பல காரணங்களால் இந்த நூலில் ஏராளமான அச்சுப் பிழைகள் ஏற்பட்டிருக்கின்றன. வாசகர்கள் மன்னிப்பார் களாக.

இந்த நூலுக்கு முன்னுரை அளித்தருளிய கவிஞர் பெருமான் நாமக்கல் இராமலிங்கனாருக்கு எனது நன்றி உரியதாகும்.

பாரதிபுரம்,
குரோம்பேட்டை, சென்னை
1—12—66

பரலி, சு. நெல்லையப்பன்

ஆசிரியர் சுருக்க வரலாறு

ஆசிரியர் நெல்லையப்பர், திக்கெலாம் புகழும் திருநெல் வேலியென்று திருஞான சம்பந்தர் பாடிய திருநெல்வேலியை அடுத்த பரலிக்கோட்டை என்ற சிற்றூரில் 1889-ம் ஆண்டு செப்டம்பர் 19-ந் தேதி (விரோதி புரட்டாசி 5) பிறந்தவர். அவர் பிறந்த ஊர் இப்பொழுது பல்லிக் கோட்டை யென்று வழங்கி வருகிறது.

நெல்லையப்பர் இளமையில் திண்ணைப் பள்ளிக்கூடங் களிலும் பின்னர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் படித்தவர். அவர் பள்ளியில் ஆங்கிலத்துடன் வடமொழி யும், பிற்காலத்தில் தேவதாஸ் காந்தியிடம், இந்தியும் படிக்க நேர்ந்த காரணத்தால், அவர் படித்த தமிழெல்லாம் தானே படித்துக் கொண்டதுதான்.

இருபது வயதில் அவர் தமது தமயனார் தம்பி இருவருடன் திருவாளர் சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் சில காலம் அலுவல் செய்தார். பின்னர் சிதம்பரனாருடன் 1908-ம் ஆண்டில் சிறைவாசம் செய் தார். சிதம்பரனார் கோவை சிறையில் இருந்தபொழுது இளைஞரான நெல்லையப்பர் கோவையில் தங்கி சிதம்பர னாருக்கு அந்தரங்கமாகப் பல உதவி புரிந்து வந்தார். பின்னர் 1910-ம் ஆண்டில் புதுச்சேரி சென்று அங்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடன் பத்திரிகைத் தொண்டில் ஈடுபட்டிருந்தார்.

மகான் அரவிந்தர் அப்பொழுது ரகசியமாக அங்கே வந்தபொழுது அவரை கடற்கரையில் வரவேற்கும் பேறு பெற்றவர்களில் நெல்லையப்பரும் ஒருவர்.

1913-ம் ஆண்டில் சென்னைக்கு வந்து பல பத்திரிகை களில் துணையாசிரியராகப் பணியாற்றினார். 1920-ல் திரு. வ. வே. சு. அய்யர் சிறைச்சாலைக்குப் போன சமயம், "தேசபக்தன்" ஆசிரியராக ஒரு வருடம் பணியாற்றினார். பின் 1922-ம் ஆண்டில், தாம் துணையாசிரியராய் இருந்த "லோகாபகாரி" பத்திரிகையை விலைக்கு வாங்கி சுமார் 20 ஆண்டுகள் லோகாபகாரியின் அதிபராகவும் ஆசிரிய ராகவும் இருந்து வந்தார்.

அடக்குமுறை உச்சமாயிருந்த காலத்தில், புதுச்சேரி யில் இருந்த பாரதியாரின் கண்ணன் பாட்டையும், நாட்டுப் பாடல்களையும் 1917, 1919-ல் முதன் முறையாக புத்தக வடிவில் வெளியிட்டு பாரதியாரால், 'அருமைத் தம்பி' என்று வாழ்த்தப் பெற்ருர். பிற்காலத்தில் அதற்காக பாரதி சங்கத்தாரால் பொன்ளுடை போற்றப் பெற்று கேடயமும் அளிக்கப் பெற்று சிறப்பிக்கப்பட்டார். அவரது தமிழ் பணிக்காக சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரும் அவருக்குக் கேடயம் அளித்தார்கள்.

சமயத்தில் பற்று மிகுந்த நெல்லையப்பர், மணிவாசகர், திருவாசகம் நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கு முன் கிடைக்கப் பெருத காலத்தில் பத்திரிகை வாயிலாக நாடெங்கும் பொருள் சேர்த்து சுமார் 20,000 பிரதிகள், ஒவ்வொன்றும் 2 அளு விலைக்கு வெளியிட்டார்.

தேவாரம் முதலிய சமய நூல்கள், அடக்கவிலைப் பதிப் பாக வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர் நெல்லை யப்பரே ஆவார்.

1941-ம் ஆண்டில் மகாத்மா காந்தியின் தனிப்பட் டோர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு ஆறு மாதம் சிறை வாசம் செய்தார்.

80 ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் திருவாளர் நெல்லையப்பர் சென்ற சுமார் 15 ஆண்டுகளாக சென்னையை அடுத்த குரோம்பேட்டையில் குடியேறி அமைதியாக வாழ்க்கை நடத்தி வருகிருர்.

முன்னுரை

தமிழ்த் தாயின் தவப் புதல்வராகத் தோன்றி, உறங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பித் தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழினத்தின் பெருமைகளையும் உணரச் செய்து தமிழ் மொழிக்குப் புத்துயிரும் தமிழ் நாட்டிற்குப் புது வாழ்வும் மலரச் செய்த மகாகவி சுப்பிரமணிய பாரதி யாரின் தோழமை யென்னும் மாபெரும் பாக்கியத்தைப் பெற்றவராகிய முதுபெரும் தேச பக்தர் உயர்திரு. பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் இயற்றியுள்ள இந்தக் கவிதை களைப் படித்துப் பரமானந்தப் பரவசம் அடைந்தேன். இந்தப் பாடல்களைப் படிக்கும்போது எனக்கு வடலூர் இராமலிங்க வள்ளலார் பாடிய

> கருணையே வடிவாய்ப் பிறர்தமக் கடுத்த
> கடுந்துயர் அச்ச மாதிகளைத்
> தருணநின் அருளால் தவிர்த்து அவர்க்கின்பம்
> தரவும் வன்புலை கொலை யிரண்டும்
> ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
> உஞற்றவும் அம்பலம் தனிலே
> மருவிய புகழை வழுத்தவும் நின்னை
> வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்

என்ற திருவருட்பா நினைவிற்கு வந்தது. இந்த அருட் பாவில் உள்ளபடி ஜீவகாருண்ய ஒழுக்கமும் சத்திய, சாந்த, சமரச, சன்மார்க்க வாழ்க்கையும், தெய்வ பக்தியும் உலக மெங்கும் பரவும்படி நாம் உழைக்க வேண்டும் என்ற கருத்தையே திரு. நெல்லையப்பரின் கவிதைகள் நினைவூட்டு கின்றன.

துன்பங்கள் மிகுந்த இந்த உலகத்தை இன்பமே நிறைந்த சொர்க்கமாக மாற்ற வேண்டுமென்ற மிகவுயர்ந்த் நோக்கமே நெல்லையப்பரின் கவிகளில் நிலவுகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் இவர் பாடிய கவிகளில் இன்றைக்குப் பேசப்படுகிற 'சோஷலிசம்' என்ற சமதர்ம சமுதாயக் கருத்துக்களுக்கும் மேலான கருத்துக்கள் காணப் படுகின்றன. மொத்தத்தில் தெய்வ பக்தி, தேச பக்தி, சத்தியம், சாந்தம், சமதர்மம், தன்னலமின்மை, பொது நலச் சேவை முதலிய உயர்ந்த பண்புகளையே புகட்டுகின்ற இக் கவிதைகள் போற்றத்தக்கன. தமிழன்பர்கள் இக் கவிதைத் தொகுப்பை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பயன்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழ்க நெல்லையப்பரும் அவர் இயற்றிய கவிகளும்.

16-3-1964 **வெ. இராமலிங்கன்**

(நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை)

அணிந்துரை

இந்நூல் கவிதைகளின் களஞ்சியம். இதில் காணப் பெறும் கவிகளை இயற்றியவர். தமிழன்னையின் தவப் புதல் வராம், செஞ்சொல் கவிஞர் பரலி. சு. நெல்லையப்பர் அவர்கள் ஆவர். அன்னார், நம் பாரத நாடு சுதந்திரம் அடைய ஏற்பட்ட அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டுப் பல்முறை சிறை சென்று, தன் வாழ்க்கையைத் தேசத் தொண்டுக்கு அர்ப்பணஞ் செய்த, செம்மைசால் அண்ணல். தெய்வீகப் புலவர், மகாகவி திரு. சுப்பிரமணிய பாரதி யாரின் புகழ் ஒளி உலகினில் பரவுவதற்கு முன்னமேயே, அவர் தெய்வீகப் புலவர் என்று முதல் முதலாகச் சாற்றி வந்த பேரறிஞர். இன்றும் சென்னையில் வதியும் சீரிய சீலர்.

இந்நூலிலுள்ள கவிகள் பல்வேறு கருத்துக்களைப் பற்றியன. நம் பாரத நாட்டைப் பிணித்திருந்த அடிமைத் தளைகளை அறுத்து, நம் பாரத மக்களை வாழ வைத்த மக்களின் தலைவர்களைப் பற்றிய பாக்கள், வித வித சமயங் கள் கொண்டாடும் இறையைப் பற்றிய கவிகள், இயற்கை யின் எழிலைப் பற்றிய கவிதைகள், தமிழ்க் கவிஞர்களைப் பற்றிய சொல் ஓவியங்கள் ஆகிய இன்னோரன்ன பலவிதக் கவிகள் இந்நூலுக்கு அணிகலன்களாய் அமைந்திருக் கின்றன.

இதில் பரந்து கிடக்கும் பாக்கள் படிப்போர் கேட்போர் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பன. மக்களின் அறிவைச் செம்மைப்படுத்தவும், மனதைப் பண்படுத்தவும், தம் உள்ளத்தில் எழுந்த அவாவால் இதில் அடங்கிய பாடல்கள், பிள்ளை அவர்களால் ஆக்கப் பெற்றவை. மக்கள் அறிவின் செம்மையிலும், மனப் பண்பிலும், மாசறு பொன்னும், வலம்புரி முத்தும் போல் விளங்க இறைவன் திருவருள் கூடுவதாக.

திருநெல்வேலி,
1-4-1966.

ச. சண்முகம் பிள்ளை பி.ஏ. பி.எல்.
வழக்கறிஞர்.

பொருளடக்கம்

பாடல்			பக்கம்
1.	திருமகளுக்கு	...	1
2.	திருக்காட்சி	...	2
3.	ஸ்ரீ செங்கண்மால் ஈசருக்கு	...	3
4.	சூரியதேவனுக்கு	...	5
5.	ஏழுமலை	...	5
6.	பாட்டு	...	6
7.	காளி எட்டு	...	6
8.	வரம்	...	9
9.	தெய்வக் குழந்தைகள் நாமே	...	10
10.	அன்பு செய்வோம்	...	12
11.	அழைப்பு	...	13
12.	தேசபக்தரின் சிந்தனை	...	15
13.	வர்ணனை	...	17
14.	மாலை	...	18
15.	பாரதநாடு	...	19
16.	நாட்டுத்துணியிலே நாட்டம் கொள்வீர்	...	22
17.	உறுதி	...	23
18.	நரகாசுரன்	...	24
19.	புதுயுகம்	...	25
20.	புதிய யுகம்	...	27
21.	அருள் ஓங்கிடச் செய்வோம்	...	28
22.	புதிய தமிழ்நாடு	...	29
23.	தமிழன் வேண்டுவது	...	30
24.	புதிய தமிழன் பாட்டு	...	31
25.	விடுதலை	...	32
26.	தமிழ்	...	32

பாடல்			பக்கம்
27.	பாடலும் ஆடலும்	...	33
28.	காற்று வாங்கும் காக்கை	...	35
29.	குளித்து முழுகும் குருவி	...	37
30.	நல்லவராகவே வாழ்வீர்	...	39
31.	பஞ்சத்துயரம்	...	40
32.	தாழ்ந்த வகுப்பார் பாடல்	...	41
33.	தொல்லையிழைத்திடும் பையல்	...	43
34.	முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி	...	45
35.	சேதுவை என்று காண்போம்	...	47
36.	காந்தி பஞ்சகம்	...	48
37.	புண்ணியம் திரண்டு வந்த புனிதன்	...	50
38.	லஜபதி வாழ்த்து	...	51
39.	விநோபாவா வேண்டுகோள்	...	54
40.	பல்லாண்டு வாழ்க நேரு	...	56
41.	மகான் வ.வெ.சு. ஐயருக்கு	...	57
42.	நிகரற்ற பாரதி	...	60
43.	வாழ்க பாரதி நாமம்	...	61
44.	வாழ்க நேரு	...	62
45.	புண்ணியம் திரண்டு வந்த புனிதன்	...	63
46.	எங்கள் அப்பாவுக்கு	...	64
47.	கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 27-10-53	...	65
48.	பாரதியாருக்கு	...	66
49.	வாலாஜாபாத் இந்துமத பாடசாலை	...	67
50.	பாரதியாருக்கு	...	68
51.	பாரதியார் பெயர் வாழ்க	...	70
52.	வாழிய திலகன் நாமம்	...	72
53.	வாழ்க காமராஜர்	...	74
54.	பகவதிக்கு (மருமகள் பிறவாற்றுமல் பாடியது)	...	75
55.	நிகரற்ற காந்தி	...	76
56.	அரியணையில் தமிழரசி	...	78
57.	பாட்டுப் படிக்கின்ற பெண்	...	79

பாடல்		பக்கம்
58.	நாட்டுப் பாட்டு ...	81
59.	தீபாவளி ...	83
60.	பாரத நாட்டு விடுதலை வீரர் ...	84
61.	காற்றில்லாமல் கூற்றுவனுக்கு இரையான மாப்பிள்ளைச் சகோதரர்களுக்கு	86
62.	இவ்வுலகை நல்லுலகாய்ச் செய்வோம் ...	88
63.	புதுயுகத்தின் கவியரசன் ...	89
64.	புதிய ஆண்டு ...	91
65.	குருவிப்பாட்டு ...	92
66.	அழகு ...	96
67.	தெளிவு ...	97
68.	ஆக்கூர் அனந்தாச்சாரியார் ...	98
69.	வானத்தை நோக்குவோம் ...	99
70.	அன்பு வாழ்க்கை ...	100
71.	சக்தியை வேண்டல் ...	101
72.	பூவுலகைப் பொன்னுலகாய்ச் செய்வோம் ...	103
73.	பஞ்சப்பேயை ஒழித்திடுவோம் ...	104
74.	வயிறு நிரம்பிவிட வேண்டும் ...	106
75.	வாழ்க மரங்கள் செடி கொடி வாழ்க ...	107
76.	மரம், செடி கொடிகள் வளர்த்திடுவோம் ...	109
77.	ஜெயக்கொடி ...	111
78.	ஏழைகள் துயரம் ...	112
79.	ஆண்ட்ரூஸ் முனிவருக்கு ...	113
80.	ஓம் எனும் பொருளான் ...	115
81.	தமிழே உன்னால் வாழ்கின்றேன் ...	116
82.	மங்களமாகப் பொங்கல் பொங்குக ...	117
83.	திருவிளக்கேற்றித் தெய்வம் தொழும் ...	118
84.	சிதம்பரனார் பஞ்சகம் ...	119
85.	எறும்புக் கிரங்கல் ...	121
86.	வருக துன்முகியே ...	122
87.	வருக நற்பிலவ ஆண்டே ...	123
88.	பாரதிக்கு ...	125

பாடல்		பக்கம்
89.	புத்துயிர் பத்து	... 126
90.	நிலவு	... 128
91.	செந்தமிழ் நாடு	... 129
92.	நேருவே நீடு வாழி !	... 131
93.	நாமக்கல் கவிஞருக்கு	... 132
94.	டாக்டர் ஆனந்த குமாருக்கு	... 132
95.	தமிழ் எழுத்தாளருக்கு	... 133
96.	நேருவே எங்கு சென்ருய்	... 135
97.	பாரதி வாழ்த்து	... 137
98.	குடியரசு ஓம்பி வாழ்வோம்	... 138
99.	வாழிய பாரதம்	... 139
100.	இந்திரா காந்தி வாழ்க	... 140
101.	லால்பகதூர் மறைவு	... 141
	காந்தி, ராஜாஜி, பக்தவத்சலம்	... 142

திருமக ளுக்கு

(1945)

திருமகளே உன் திருவடி தொழுதேன்
    தினம்தினம் உன்றன் அருளினை விழைவேன் ;
பெருமக ளேஎம் வறுமைகள் போக்கிப்
    பெருவாழ் வுறவே அருள்நீ புரிவாய் ;
கருமா முகில்சேர் கனகக் கொடியே
    கலிஒழிந் தறமே நிலவப் புரிவாய் ;
பெருநா நிலமே புதுவாழ் வுறவே
    பெருந்திரு வேநீ அருள்புரிவாயே.

திருக்காட்சி

செடியிலே கொடியிலே நின்னைக் காண்பேன்
திகழ்கின்ற தருக்களிலே நின்னைக் காண்பேன்;
வடிவுடைய தாமரையில் நின்னைக் காண்பேன் ;
வனப்புடைய மலர்களிலே நின்னைக் காண்பேன் ;
படிதனிலே பறவைகளில் நின்னைக் காண்பேன் ;
பால்பொழியும் பசுக்களிலே நின்னைக் காண்பேன் ;
விடை குதிரை மான்களிலும் நின்னைக் காண்பேன் ;
வியன்உலக வியப்புகளில் நின்னைக் காண்பேன். 1

அழகுடைய மகளிரிடம் நின்னைக் காண்பேன்
அறிவுடைய மாந்தரிடம் நின்னைக் காண்பேன்
மழலைமொழிச் சிறுவரிடம் நின்னைக் காண்பேன்
மாதேவன் கோயிலிலே நின்னைக் காண்பேன்
அழகெங்கே அறிவெங்கே அறங்கள் எங்கே
அன்பெங்கே அங்கெல்லாம் நின்னைக் காண்பேன்
எழிலொழுகும் திருவடியாய் வையத் துள்ள
இன்பமெல்லாம் நின்னருளே யென்றும் காண்பேன். 2

செங்கதிரோன் ஒளியிலே நின்னைக் காண்பேன்
சீதமதி நிலவினிலே நின்னைக் காண்பேன்
பொங்குடல் மலைகளிலே நின்னைக் காண்பேன்
புவிக்கணியாம் நதிகளிலே நின்னைக் காண்பேன்
மங்களமாம் திருவிளக்கில் நின்னைக் காண்பேன்
வானத்துச் சோதியெலாம் நின்னைக் காண்பேன்
பங்கயத்தில் வளர்கின்ற திருவே என்றன்
பாமாலை அணிந் தெனக் கிங் கருள்செய் வாயே. 3

ஸ்ரீ செங்கண்மால் ஈச ருக்கு

(1914)

பொங்குகப் பல வளங்கள்
புனித நல்லறங்கள் ஓங்க
திங்கள் மும்மாரி பெய்ய
திருவுடன் அறிவும் ஓங்க
எங்கள்நா டென்று மில்லா
எழில்நலம் சிறந்திங்கோங்க
செங்கண்மா லீசர் தம்மைத்
தினந்தொழு தேத்துவேனே. 1

வையகம் சிறக்குமாறும்
வானகம் திறக்குமாறும்
மெய்யக முள்ள மேலோர்
விளங்கியே பெருகுமாறும்
பொய்யக முள்ளோரெல்லாம்
புனிதராய்ப் பொருந்துமாறும்
தெய்வத்தில் பெரியோய் உன்றன்
திருவடி தொழுதேன் யானே. 2

கருமத்திற் சனகன்போல் வார்
கண்ணப் பன் பத்தி வாய்ந்தோர்
பெருமைசேர் யோகந் தன்னில்
பெரும்பதஞ் சலியே போல்வார்
திருமிகு ஞானம் தன்னில்
சுகனெனச் சிறந்தார் பல்லோர்
பெரிய இவ்வையம் தன்னில்
பெருகிட அருள்செய் வாயால். 3

தானமுந் தவமும் வேண்டும்
தருமமுந் திருவும் வேண்டும்
ஞானமும் மெய்யுமாதி
நலங்களும் பிறவும் வேண்டும்
கானகம் திரிந்திட்டாலும்
காவல னாய் விட்டாலும்
மோனமார் உளத்தில் மேவும்
முதல் நின் நினைவு வேண்டும். 4

இல்லை யென் றாதெவர்க்கும்
இட்டுண்டிங் கினிது வாழ்தல்
சொல்லென்றும் இனிய சொல்லல்
தூய சிந்தனையே செய்தல்
அல்லும் ஒண் பகலு மென்றும்
அறத்தினை அகத்துட் கொள்ளல்
நல்லவர் குழுவிற் சேர்தல்
ஆதிய நலங்கள் தாராய். 5

அந்தணர் வாழ்க என்றும்
ஆவினம் பல்கி ஓங்க,
செந்தழல் வேள்வி மல்கத்
திருமறை ஒலிகள் ஓங்க
மைந்தர்கள் சிறக்க என்றும்
மாதர்கள் கற்பில் ஓங்க
இந்தமா ஞால மெல்லாம்
இன்புடன் வாழ்க மாதோ. 6

சூரிய தேவனுக்கு

1910

அறிவாய் விளங்கும் ஆதி பகவனே !
ஒளியாய் விளங்கும் உவப்பே வியப்பே!
தெளிவாய் நிறைவாய்த் தேசாய் விளங்கி
உலகம் அனைத்தும் உயிர்பெற நின்றே
இலகும்எம் இறையே எந்தாய் எம்மனோர்
இருளெலாம் போக்குதி ! இருளெலாம் போக்குதி !
அறிவொடு தெளிவும் அழிவிலாத் திறனும்
பிறநற் குணங்களும் பெரியோய் நல்குதி !
ஆதியாய் நின்றஎம் அருந்தமிழ் நாடு
பேதைமை நிறைந்த பெருங்கா டாயது
அறிதியெம் இறைவ! அருள்புரி விரைவில்
நிறைவொ டென்உள்ளக் கமலநிற் கீந்தேன்
குறையெலாம் நீக்கிக் குணமெலாம் அருளே !

ஏழுமலை

1928

ஏழுமலை மீதிருந்து கருணை செய்வாய்
எம்பிரான் நின்அருளே வேண்டி நின்றேன் ;
வாழும் உயிர்த் திரள் அனைத்தும் வாழவைப்பாய்
வானவரும் தொழுதேத்த மலையில் நிற்பாய் ;
தாழ்கின்றேன் என்தலைஉன் தாளின்மீது
தன்மமெலாம் தரணியிலே வாழ வைப்பாய் ;
ஏழையேன் அற நெறியில் வாழ வைப்பாய்
எழில்வளரும் ஏழுமலை வளரும் தேவே.

பாட்டு

1920

ஈச ஞர்தம் பெருமையைப் பாடவோ
எந்தை நாட்டின் பெருமையைப் பாடவோ
நேச மாதர் அழகினைப் பூவினை
நீல வானத் தெழிலினைப் பாடவோ
வீசு தென்றல் இனிமையை மாலையை
மின்னு வெண்டிரை வாரியைப் பாடவோ
மாச கன்ற புலவருக் குள்ளதாம்
மாட்சி ஒன்றிலன் மற்றதைப் பாடுகேன் ?

காளி எட்டு

(1910)

சீராரும் பரலி நகர் வாழும் தேவீ
சிறியனேன் நெஞ்சகத்தில் திகழும் செல்வீ
போரார்வம் மிகக் கொண்டேன்
புனிதவதீ நின்னடிகள் சிரத்திற் கொண்டேன்
தீராத வலி தருவாய் தேயத்தில் மறம் புரியும்
தீயோர் தம்மை.
நேராகச் செய்யும் வணம்
நீலமலை யெனத் திகழும் நிமலை நீயே. 1
காளியெனப் பெரியோர்கள் வாழ்த்த நின்ருய்
கண்ணிலாச் சேயேற்குத் தாயாய் நின்ருய்
தோள்வலியான் வேண்டினேன் ஆலகாலீ
தொன்மையெலாம் நன்மையுறப் புரிதல் வேண்டும்
வாள்வலியோ டெண்ணிலா வலியும் தாராய்
வன்மைக்கும் நன்மைக்கும் நிலைய மாஞய்
ஆள்வலியும் வேண்டினேன் அன்ஞய் காவாய்
அம்பிகையே சிறுவனெனக் கருள்செய்வாயே. 2

நின்னருளால் முப்புரத்தை எரித்தான் எந்தை
நீலவண்ணன் உலகமெலாம் காவல் பூண்டான்
நின்னருளால் மலரவனும் படைத்தல் செய்தான்
நீயின்றி யார் தானிங் கியங்க வல்லார் ?
அன்னநடைப் பொன்னவளாய் வாக்கின் தாயாய்
அரனுர்தம் இடப்பாகம் கொண்ட தாயாய்
இன்னுமே பல விதமா நடிக்குந் தாயே
ஏழையேன் சிறு மொழிகேட் டருள்செய் வாயே. 3

வானுகி மண்ணுகி வளியு மாகி
வன்மையுமாய் நன்மையுமாய் யாவுமாகி
கானுகி மலையாகிப் புனலுமாகிக்
கனலாகிக் கனல்விழியோன் மனையுமாகி
நானுகி நீயாகி அவனு மாகி
நானிலமெல்லாம் இயக்கும் சத்தியாகித்
தேனுகி என்னுளத்தில் இனிக்கும் தாயுன்
திருவடி யென் முடிமீது சூடினேனே. 4

அரியென்ற எழுத்தளவும் அறியாதாரை
அன்னையே அபிராமித் தாயே முன்னம்
திரிபுரத்தை எரித்தவளே ஜெயமாதேநீ
ஜெயவீர மன்னரெனத் திகழவைப்பாய்
கிரியெட்டும் தரைமட்டம் செய்யவைப்பாய்
கீழுலகும் மேலுலகும் ஆளவைப்பாய்
பரையட்டகாளியாய் நிருத்தம் செய்யும்
பராபரியே அம்பிகையே கண்பாராயே. 5

நீலநிறம்தன்னிலே நின்னைக்காண்பார்
நிர்மலியே செம்மையிலே சிவனைக் காண்பார்
சீலமிகும் மஞ்சளிலே அயனைக் காண்பார்
செல்வியுன்முன்னவன் உன் நிறமே யென்பார்

வேலைசூழ் உலகமெலாம் நீயாய்க் காண்பேன்
விமலை பராசத்தியே தொழுதேன் உன்னைச்
சாலவும்நல் லறத்தை நிலை நாட்டி யிந்தத்
தரணியெலாம் உய்யுவணம் தவம் செய்வேனே. 6

அண்டபகிரண்ட மெலாம் நீயாய் நின்ருய்
அங்குவாழ் உயிரனைத்தும் நீயாய் நின்ருய்
அண்டங்கள் இயக்குகின்ற சத்தியானுய்
ஆக்கியும் காத்துமே மாய்த்துநின்ருய்
ஒண்டங்க மேனியனுய் வாக்கின்தாயே
உம்பர்பிரான் எம்பெருமான் உவந்த தாயே
பண்டுபோல் என்னவரை ஆக்க வேண்டிப்
பாலனேன் தவஞ்செய்வேன் கண்பாராயே. 7

அந்தரம் தன்னிலே யியங்கவேண்டும்
அன்னையே யிறந்தோரை மீட்டவேண்டும்
சந்ததமும் நோயின்றி இளமைவேண்டும்
சாவின்றி விடுதலையே பெறுதல் வேண்டும்
பந்தமின்றிச் சனகனைப்போல் வாழவேண்டும்
பத்திபுரி உத்தமர்கள் சித்தர்வேண்டும்
சுந்தரியே நல்ல யுகம் வருதல் வேண்டும்
தொல்லுகம் நல்லுலகாய் ஓங்குமாறே. 8

வரம்
(1925)

என்றேனும் ஒரு நாளில்
சாகவேண்டும்

இறைவா உன் திருநாமம்
மறவா தென்றும்

குன்ருமல் அறம்செய்திங்
கன்பு செய்து

கோதற்ற நல்வாழ்வு
வாழவேண்டும்

அன்ருலின் கீழிருந்திங்
கறஞ் சொன்ஞய் நீ

அடியனேன் உளத்தென்றும்
அமர்ந்து வாழ்வாய்

மன்ருடும் மணியே என்
மனத்தும் ஆடும்

மாசிலா மணியே யிவ்
வரமீ வாயே.

தெய்வக் குழந்தைகள் நாமே

(1922)

தெய்வக் குழந்தைகள் நாமே—இந்த
ஜெகத்தினை உய்விக்க வந்தோம்
வையகம் தன்னிலே மீட்டும்—உயர்
மாணறம் நாட்டிட வந்தோம். (தெய்வக்) 1

கடவுட் குழந்தைகள் நாமே—புவிக்
கவலைகள் தீர்த்திட வந்தோம்
படியினில் நல்லறம் நாட்ட—இந்த
பாரத நாட்டினில் வந்தோம். (தெய்வக்) 2

சிவன்திரு மைந்தர்கள் நாமே—அவன்
சித்தத்தினுல்இங்கு வந்தோம்
பவந்தரு தீமை ஒழித்து—இந்தப்
பாரை உயர்த்திட வந்தோம். (தெய்வக்) 3

ஹரிதிரு மைந்தர்கள் நாமே—இங்கே
அதர்மங்கள் ஒழித்திட வந்தோம்;
விரிதரு வையகம் எங்கும்—மீட்டும்
மெய்யறம் நாட்டிட வந்தோம். (தெய்வக்) 4

கிருஷ்ணனின் பிள்ளைகள் நாமே—இங்கே
கேட்டை ஒழித்திட வந்தோம்;
சிருஷ்டி யிலுள்ள உயிர்கள்—யாவும்
க்ஷேமம்இங் கெய்திட வந்தோம். (தெய்வக்) 5

புத்தரின் பிள்ளைகள் நாமே—இங்கு
புண்ணியம் ஆக்கிட வந்தோம்;
இத்தரை மீதினில் அன்பை—மீட்டும்
ஏற்றமுறச் செய்ய வந்தோம். (தெய்வக்) 6

அல்லாவின் பிள்ளைகள் நாமே—அவன்
அருளிய வேதம் உணர்ந்தோம் ;
பொல்லாஇவ் வுலகினை மீட்டும்—நாங்கள்
புண்ணியம் ஆக்கிட வந்தோம் (தெய்வக்) 7

ஏசுவின் மைந்தர்கள் நாமே—அவன்
இயற்றிய வேதம் உணர்ந்தோம் ;
நாசமும் நீசமும் நீக்கி—நன்
நெறியினை நாட்டிட வந்தோம். (தெய்வக்) 8

காந்தியின் பிள்ளைகள் நாமே—அவர்
கடவுளென் றிங்குவந் திட்டார் ;
சாந்தம் நிலவிடச் செய்து—இந்த
ஜகத்தினை உய்விக்க வந்தோம். (தெய்வக்) 9

அன்பை வளர்த்திட வந்தோம்—இங்கு
அல்லல்கள் தீர்த்திட வந்தோம் ;
துன்பங்கள் தீர்த்திட வந்தோம்—பரஞ்
சோதி அருளினால் வந்தோம். (தெய்வக்) 10

தர்மங்கள் நாட்டிட வந்தோம்—இங்கு
சத்தியம் நாட்டிட வந்தோம் ;
கர்மங்கள் மற்றவை நிற்க—இதில்
கருத்துக் கொள்வீர் உலகீரே. (தெய்வக்) 11

அன்பு செய்வோம்
(1947)

அன்பு செய்வோம் அமரர் ஆவோம்!
இன்பம் மேவி இனிது வாழ்வோம்!

அன்பு செய்வோம் அமரர் ஆவோம்
இன்பம் மேவி இனிது வழ்வோம்;
துன்பம் இன்றித் துயரம் இன்றி
மன்ப தைகள் வாழ வைப்போம். (அன்பு) 1

வறுமை யின்றிச் சிறுமை யின்றி
மடமை யின்றிக் கொடுமை யின்றிச்
செறியும் அன்பில் மக்க ளெல்லாம்
தேவ ரென்ன வாழ வைப்போம். (அன்பு) 2

உண்ணச் சோறு, உடுத்த ஆடை,
உறைய வீடு, உலாவச் சோலை,
மண்ணில் யார்க்கும் திண்ணமாக
வழங்கி வாழ்வோம் வையத் தீரே. (அன்பு) 3

அழைப்பு

(1924)

அறுசீர் விருத்தம்

அன்பினைக் கொள்வோம் என்றும்
அறத்தினைச் செய்வோம், வாழ்க்கை
இன்புறச் செய்வோம், வையத்து
ஏழைகள் இலையென் றாக்கித்
துன்பங்கள் போக்கி நாட்டில்
சுக வாழ்வு, பெருகச் செய்வோம்
அன்பர்காள் எழுமின் நாட்டை
அமரர்நா டாகச் செய்வோம். 1

சிறுமைகள் ஒழித்து நாட்டில்
தீமைகள் ஒழித்துத் தீய
வறுமையை ஒழித்து நல்ல
வளம்பல பெருகச் செய்வோம் ;
குறுகிய மனத்தைக் கொன்று
குவலய மெல்லாம் அன்பு
செறிவுற வளரச் செய்வோம்
செந்தமிழ் நாட்டீர் வாரீர் ! 2

இருளினை ஒழிப்போம் நாட்டில்
அறிவொளி பரப்பி எங்கும்
திருவினை வளர்ப்போம் என்றும்
தேயத்தில் ஆண்மை ஓங்க
வருவது நல்ல காலம்
தமிழர்காள் வம்மின் நாளும்
ஒருவனைத் தொழுது நாட்டை
உயர்த்துவோம் ஒல்லை வாரீர் !

கல்வியைப் பெருகச் செய்வோம்
　　கலைகளை வளரச் செய்வோம் ;
நல்லன பெருகச் செய்வோம்
　　ஞானமிங் குயரச் செய்வோம் ;
வல்லமை பெருகச் செய்வோம் ;
　　மாநிலம் வாழச் செய்வோம் ;
தொல்லைகள் இனிஒன் றில்லை
　　துணைசெய்யும் இறை நமக்கே. 4

தேசபக்தரின் சிந்தனை

சீருறும் என்றன் நாட்டினை முன்போல்
சீருறச் செய்வலிங் கென்றும்
பாரினில் மிகுந்த வறுமைவாய்ப் பட்டுப்
பன்னலம் இழந்துமாண் பிழந்து
காரினில் மறைந்த மதியென விளங்கும்
கண்மணி யனையஎன் நாட்டார்
பேருறப் பழைய சீரினை அடையப்
பெரிதும்யான் முயன்றிடு வேனல். 1

சொல்லினல் செயலால் சிந்தனை யதனல்
தூயஎன் நாட்டினை முன்போல்
பல்வளம் திகழப் புரிபவர் எவரும்
பாரினில் தேவராய்த் தொழுவேன்
அல்லும் ஒண்பகலும் ''நாடுநன்ருக''
என அகம்கொண்ட என் ஆவல்
ஒல்லையில் முடிய ஒண் மதிப் பரமன்
உயரடி தினம் தொழுவேனல்! 2

பாரத நாடு பழைய முன்னிலையைப்
பண்பொடு பெறுதலா லிங்கு
வாரிதி சூழும் புவியெலாம் சிறக்கும்
வன்மையும் நன்மையும் ஓங்கும்;
தீரர்கள் மலியத் தரணியில் எங்கும்
சிவக்களி பெருகியே திகழும்
வீரர்கள் மலிய மேலவர் பெருக
மெய்யும் நல்லறமுமே விளங்கும். 3

பன்னலப் பரத நாடுநன் றுறுவான்
பரிவொடு முயலுவார் எவரும்
இந்நில மெல்லாம் இன்புறப் புரியும்
பெரியரில் இன்புறு வாரால்
நன்மர மொன்றன் வேரினுக் கீயின்
மரமெலாம் நலமுறு மன்றே ?
தொன்மைநல் லுலகிற் குயிரெனத் திகழும்
தொன்னிலம் பாரதம் வாழி ! 4



வர்ணனை

(1914)

(ராபர்ட் ஹெரிக் என்ற ஆங்கிலப் புலவர் பாடிய சில பாடல்களின் கருத்தைத் தழுவி அடியில் கண்ட பாடல்கள் தாய்க் கிழவி கூற்ருக அமைக்கப்பட்டுள்ளன.)

அதரம்

ஒரு சிலர் என்பார் வந்தே
உத்தமப் பவளந் தானும்
வருவ தெங் கிருந்தோ அஃது
வளருவ தெங்கே யென்ருர்
ஒரு விரல் கொண்டு சுட்டிக்
காட்டியே ஒப்பிலாத
திருவினும் நல்லாள் என்றன்
புதல்வி செவ் விதழேயென்றேன். 1

பல்

நன்று நீர் உரைத்தீர் அம்ம
நலமிகு முத்து வேண்டிச்
சென்றுசென் றலைந்தோம் தேடி
எங்குள தியம்பும் என்ருர்
அன்றலர் கமலப் போதின்
அழகினும் வதன மிக்க
என்றன் நன் மகளைப் பற்கள்
இலங்கிடப் பேசுகின்றேன். 2

முகம்

மகிழ்மிக வுற்ரேம் நல்ல
கமலமா மலர் எங் குண்டு
புகலு வீர் எங்கட் கென்ருர்
பூமியை நோக்கி நின்ற
நிகரில் என் மகளை நோக்கி
நீணிலம் நோக்கேல் என்றேன்
முகமலர் பிறரும் நோக்க
நிமிர்ந்தனள் முறுவல் பூத்தார். 3

கண்

வீரர்கட் குரித்தாய் மிக்க
மேன்மையும் ஒளியும் வாய்ந்து
சீரியல் தண்மை வெம்மை
திகழுமோர் வாள்எங் கென்ருர்
கார் திகழ் குழலாள் என்றன்
கண்மணி யனைய நங்கை
போர் மதன் தெய்வம் போல்வாள்
கண்களே யெனப் புகன்றேன். 4

மாலை
(1914)

புல்லின் மேல்நுனி என்னத் தளர்ந்து,
பூவில் வாழ்க்கை துயரெனத் தீர்ந்து,
அல்லலே மிகத் துய்த்திடு வார்க்கும்
அளிக்கும் இன்பமிவ் வழகிய மாலை
சொல்லொ ணுத கவினுடை மாலை
தூய மாலை சுடர்திகழ் மாலை
நல்ல மாலையிம் மாலையில் மாலை
நான் அடைந்தனன் வாழிய மாலை.

பாரத நாடு

(1910)

பொன்னுலாம் மாடங்கள் திகழ்ந்த நாடு ;
புண்ணியரும் திண்ணியரும் திகழ்ந்த நாடு ;
கன்னியர்கள் அரம்பையர்போல் திகழ்ந்த நாடு ;
காளையர்கள் வேளெனவே திகழ்ந்த நாடு ;
உன்னரிய பலஅறங்கள் சிறந்த நாடு ;
உம்பர்பிரான் எங்கள் சிவன் பரையோடென்றும்
என்னுளும் நடம்புரியும் நலஞ்சேர் நாடு ;
எம்நாடு வீழ்ந்திருக்கும் வீழ்ச்சி யென்னே ! 1

தருமமெலாந் தழைத்தோங்கச் சகத்தோ ரெல்லாம்
சங்கரனைத் தொழுதேத்தித் தழைத்த நாடு ;
கருமமொடு பக்தியும்நல் யோக ஞானக்
கலைகளும் தலைமையாய்த் திகழ்ந்த நாடு ;
திருமலியப் பாண்டவர்கள் கண்ண னோடும்
தேயமெலாம் வென்றுதிறை கொண்ட நாடு ;
செருவதனிற் கரிநூறு நொறுக்க வல்லார்
திண்டிறல்சேர் மன்னர்பலர் திகழ்ந்த நாடு. 2

கங்கையும் காவிரியும் பாயும் நாடு ;
கதிர்மணியார் மலைகள்பல திகழும் நாடு ;
பங்கயமென் மலர்மீது சேல்கள் பாயப்
படைநெடுங்கண் மாதர்முகம் விளக்கும் நாடு ;
பொங்குவளம் பலதிகழப் புவியி லென்றும்
பொன்னுட்டார் கண்ணுட்டும் பொற்பார் நாடு ;
திங்களணி எங்கள்பிரான் தேவ ரோடும்
திருமலியப் புகழ்மலிய ஆண்ட நாடு. 3

தானமொடு தருமமெலாந் தழைத்த நாடு ;
தவமன்றி அவமொன்றும் அறியா நாடு ;
வானமொடு மண்ணகமும் வணங்கும் நாடு ;
வையகத்தில் தெய்விகமாய்த் திகழும் நாடு ;
ஞானமொடு வீரமுதற் குணங்கள் யாவும்
நாவலரும் பாவலரும் மலிந்த நாடு ;
ஏனமொடு எகினமாய் இருவர் தேட
எங்கள்பிரான் எரிமலையாய் நின்ற நாடு. 4

தாயிழந்த சிறுபன்றிச் சேய்கட் காகத்
தண்மதியம் புனைந்தபிரான் பன்றி யாகிச்
சேயிழந்த தாயென்ன விரைந்து வந்து
சிறுபன்றிப் போத்துகளைக் காத்த நாடு ;
வாயிழந்த பறவைமுதல் உயிர்கட் கெல்லாம்
வண்மையுடன் வானுலகங் காட்டும் நாடு ;
வேயிகழுந் தோளிசேர் பாக னென்றும்
விதவிதமாய் ஆடல்புரி மேன்மை நாடு. 5

மனிதர்களும் வானவர்போல் திகழும் நாடு ;
வானவரும் மண்ணகத்தை நாடும் நாடு ;
புனிதராம் முனிவர்பலர் திகழ்ந்த நாடு ;
பூமகட்கோர் திலகமெனத் திகழும் நாடு ;
கனிதருநல் மரங்கள்பல திகழும் கானில்
கலைமானும் கடும்புலியும் குலவும் நாடு ;
தனிநின்ற சிறுசெடிக்குத் தன்தேர் ஈந்து
தனிநடந்த தண்ணருளான் பாரி நாடு ; 6

ஜீவகா ருண்யநலம் சிறந்த நாடு ;
சிவஞானப் புத்தர்பிரான் திகழ்ந்த நாடு ;
பாவகா ரியமில்லா வேந்தர் பல்லோர்
பாராண்டு புகழ்படைத்த பரத நாடு ;

நாவகத்துப் பொய்யறியா நலஞ்சேர் நாடு ;
நன்மையன்றித் தின்மையறி யாத நாடு ;
பூவகத்து வீழ்ந்திருக்கும் வீழ்ச்சி யென்னே !
புன்மையேன் நெஞ்சுபடும் துயரம் என்னே ! 7

ஆவிநேர் நாயகர்கள் அமரில் மாய
அன்னநடை யாரவர்பின் உயிர்தீர் நாடு ;
காவிநேர் விழியார்கள் கற்பில் என்னும்
காணும்அருந் ததியரெனத் திகழும் நாடு ;
வாவிசேர் சோலைகளில் குயில்கள் கூவ
வன்னமயில் மின்னுரில் நடிக்கும் நாடு ;
பாவியோர் சிறியனேன் என்ன சொல்கேன் !
பாரதநா டின்றிருக்கும் நிலைமை யென்னே ! 8

வேதியர்கள் வேதரெனத் திகழ்ந்த நாடு ;
வேந்தரெலாம் விண்டுருவாய்த் திகழ்ந்த நாடு ;
நீதிலா வணிகரெலாம் அளகை வேந்தர்
எனத்திகழ்ந்த திருநாடு ; தீதில் வேளாண்
சாதியர்மிக் கோதுபுகழ் கொண்ட நாடு ;
தக்கோரும் மிக்கோரும் திகழ்ந்த நாடு ;
வீதியிது என்சொல்கேன் ! ஐயோ ! எங்கள்
மேனாடு வீழ்ந்திருக்கும் வீழ்ச்சி யென்னே ! 9

விண்ணிழியும் தாரையெனப் பசுக்க ளெல்லாம்
வேண்டுமட்டும் பால்சுரக்கச் சிறுவ ரெல்லாம்
பண்ணவர்போல் மகிழ்ந்தருந்தி வளரும் நாடு ;
பாரதர்தம் பெருநாடு, திருநா டெங்கள்
கண்ணுன நாட்டின் நிலை என்ன சொல்கேன்
கடவுளர்தம் திருவடிகள் தொழுது நிற்பேம் ;
விண்ணுரும் பரிதியெனத் திகழ்ந்த நாங்கள்
மீட்டும்உயர் நிலைபெற்று விளங்கு மாறே. 10

நாட்டுத் துணியிலே நாட்டம் கொள்வீர்

நாட்டுத் துணியிலே நாட்டம் கொள்வீரே !
நல்ல தீ பாவளி நாள்இந்த நாளே !
கேட்டை விளைத்திடும் மில்துணி வேண்டாம் ;
கேடு தரும்பர தேசியும் வேண்டாம் ;
பாட்டாளி நெய்திடும் கைத்தறித் துணியைப்
பரிவுடன் வாங்கியே ஆதரிப் பீரே
வாட்டம் ஒழிந்திடும் வயிறு குளிர்ந்திடும்
வாழ்வு சிறந்திடும் வாழிய நீரே. 1

சோற்றுக் கில்லாமல் வருந்திடும் சோதரர்
தொன்மைத் தொழிலையே ஆதரிப் பீரே !
போற்றியே வள்ளுவர் புனிதமாய்க் கொண்டது ;
பூமியி லேபழி பாவம் இல்லாதது
நாற்றிசை யோரும் போற்றிப் புகழ்ந்தது ;
நாட்டுத் தொழில்களில் ஏற்றம் மிகுந்தது ;
மாற்றில் லாத பெருந்தொழில் இதனை
வாழ வைத்துநீர் வாழ்ந்திடு வீரே ! 2

உறுதி

1913

இமயவரை ஓர்முடியென் முடிமீது வீழ்ந்திடினும்
இறையும் அஞ்சா
அமைதியுள மனம்கொண்டேன் ஆர்கலிமேற்பொங்கி
அமிழ்த்து மேனும், [எனை
இமையளவும் கலங்கலுறேன் அண்டமெலாம் இடிந்
வீழு மேனும், [தென்மேல்
சமநிலையில் நீங்கிடேன் சங்கரனை அகங்கொண்டேன்
ஜகம்கொண் டேனே
பரிதிபல கோடியெழுந் தென்னையிவன் பாழ்செய்யப்
பார்க்குமேனும்
எரியும் அனற் கடவுளவன் வன்மையெலாம் செலுத்தி
எதிர்த்திட்டாலும் [யெனை
திரையலைக்கும் காற்றிறைவன் தீமைமிகப் புரிந்திடவே
சிந்தித்தாலும்
புரை யுறேன் பொங்கலுறேன் புண்ணியனைச் சங்கரனை
அகம்கொண் டேனே.

நரகாசுரன்

1954

முன்னாளில் நரகன்என்றோர் அசுரன் வாழ்ந்தான்
மூடன்அவன் உலகைமிக வருத்தி வந்தான் ;
பன்னாளும் மக்களெல்லாம் தவங்கள் செய்து,
பரமனையே வேண்டி மிகப் பரவி நின்றார் ;
பொன்னான திருமகளின் கேள்வ னான
புயல்வண்ணப் பெருமானும் புவியில் வந்து,
அன்னானோ டமர்செய்து அழியச் செய்தான்
அகிலமெலாம் இன்புற்று வாழ்ந்த தம்மா ! 1

இன்றுலகில் நரகன் என்றோர் அசுரன் இல்லை ;
எண்ணற்ற அசுரர்நமை வருத்துகின்றார்
கொன்றிடுமே பஞ்சம் எனும் அசுரன் தானும்
கொடுமைமிகும் வறுமையெனும் அசுரனோடு
பொன்றச் செய் நோய்கள்எனும் அசுரர் பல்லோர்
போரென்னும் அசுரனும் புவியில் இன்னும்
நன்றிலா அசுரர்பலர் தோன்றி அந்தோ !
நாளும் இவண் மக்களையே நலியச் செய்வார். 2

இவரையெலாம் அழிந்துநமக் கருளு மாறு
எம்பெருமான் திருவருளை வேண்டி நிற்போம் ;
புவியிலே கலிஒழிந்து உண்மை ஓங்கும்
பொன்னான கிருத யுகம் பூக்க வேண்டும் ;
அவமான சாதிமத நிறபே தங்கள்
அனைத்தும் ஒழிந்து, அன்பேமேல் ஓங்க வேண்டும்
தவமான பெரியோர்கள் நெறியில் நின்று
தரணியெலாம் உய்யும் வகை வேண்டுவோமே ! 3

புது யுகம்
1952

நொண்டிச் சிந்து

புதுயுகம் தோன்றியதால்—அதைப்
பொன்மலர் தூவியே போற்றிடுவோம்;
கதிநமக் கருள்புரியும்—கொடுங்
கலியின் கொடுமைகளை ஒழித்திடுவோம்;
ததியுறும் மத்தெனவே—மக்கள்
சந்ததம் படும்துயர் ஒழித்திடுவோம்;
சதிசெய்யும் பொய்ம்மையெலாம்—இனித்
தரணியில் இடமின்றி ஒழித்திடுவோம். 1

வறுமையை ஒழித்திடுவோம்—புவி
மடமைகள் அனைத்தையும் ஒழித்திடுவோம்;
சிறுமைகள் ஒழித்திடுவோம்—இனித்
தேவர்க ளென்னவே சிறந்திடுவோம்;
நெறியினில் சென்றிடுவோம்—தீ
நெறிகள் அனைத்தையும் ஒழித்திடுவோம்
செறிவுறும் அன்பினிலே—நல்ல
செல்வர்களாய் நலம் சிறந்திடுவோம். 2

அன்பினில் ஓங்கிடுவோம்—நாம்
அமரர்கள் என்னவே மேம்படுவோம்;
துன்பமும் துயருமற்ற—மிகத்
தூயநல் வாழ்க்கையில் உயர்ந்திடுவோம்;
இன்பினில் வாழ்ந்திடுவோம்—புவியில்
யாவரும் உடன்பிறந் தார்போலே;
நன்பதம் பெற்றிடுவோம்—இந்த
ஞாலத்தில் வறுமையை ஒழித்திடுவோம்.

ஒருசிலர் செல்வர்களாய்—இங்கு
உண்டுடுத்துப் பூண்டுகளித் துலவிடவும்,
கருதறு வறுமையிலே—பலர்
கால்வயிறும் இல்லாமல் கலங்குகின்ற
கருமத்தை ஒழித்திடுவோம்—கொடுங்
காலனே வந்தாலும் எதிர்நிற்போம் ;
தருமமே வாழ்கவென—ஈசன்
சரண்அடைந் தவன்புகழ் ஓதுவமே. 4

புதிய யுகம்

1950

சொல்லரிய தியாகங்கள் பலவும் செய்து
சுந்தரப்பே றடைந்திட்டோம் தொல்லை யின்றி
எல்லோரும் நல்வாழ்வு வாழச் செய்வோம்
இல்லையென்ப துலகத்தில் இலதாச் செய்வோம்
கல்லாதார் இல்லாதார் இலராச் செய்வோம்
கலைகளெலாம் மேலோங்கி வளரச் செய்வோம்
பொல்லாத ஜாதி மத நிற பேதங்கள்
பூமியிலே இல்லாமல் செய்வோம் இன்றே 1

அன்பு நெறி உலகத்தில் ஓங்கச் செய்வோம்
அறங்களெலாம் ஓங்கியே வளரச் செய்வோம்
துன்பங்கள் துயரங்கள் ஒழியச் செய்வோம்
சூதான போர்களெலாம் ஒழியச் செய்வோம்
மன்பதைகள் அனைவரும் ஓர் குலமே யாக
மாநிலத்தில் பெருவாழ்வு வாழச் செய்வோம்
இன்புருவாம் ஈசன்தன் அருளைப் போற்றி
இணையற்ற புதிய யுகம் காண்போம் நாமே 2

பறவைகளும் விலங்குகளும் பாரில் உள்ள
பல வகையாம் மரம் செடிகள் கொடிகள் தாமும்
குறைவின்றி நல்வாழ்வு வாழச் செய்வோம்
கொடுமை யென்ப துலகத்தில் இலதாச் செய்வோம்
நிறைவாழ்வு மக்களெலாம் வாழச் செய்வோம்
நீடுலகில் புதியதோர் யுகத்தைக் காண்போம்
இறைவனுர் திருவருளை வாழ்த்தி யென்றும்
இணையற்ற புதுவாழ்வு வாழ்வோம் நாமே. 3

அருள் ஓங்கிடச் செய்வோம் !

மன்னவ ரென்ன இம் மண்ணினில் வாழ்வோம்-இந்த
மாநிலத் தேயினி யாருக் தும் அஞ்சோம்.
அன்னிய ருக்கினி அடிமையாய் மாளோம்-இந்த
அவனியி லேபெரு வாழ்வினி வாழ்வோம். 1

பாரினி லேயினி யாருக்கும் அஞ்சோம்-இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாட்டினில் வந்தோம்
சீருக்கெல் லாம்முத லாகிடும் தெய்வம்-அது
செய்தநன் னீதி நெறியினில் செல்வோம். 2

வறுமையை நாட்டில் ஒழித்துமே வாழ்வோம்-பெரு
வாழ்வினி யெல்லோரும் வாழ்ந்திட செய்வோம்
சிறுமையை நாட்டில் ஒழிந்திடச் செய்வோம்-இனித்
தேவர்க ளென்ன எல்லோரும் வாழ்வோம். 3

அறமும்நல் உண்மையும் ஓங்கிடச் செய்வோம்-எங்கும்
அன்புவளர்ந் தின்பம் ஓங்கிடச் செய்வோம்
அறவடி வானநம் அந்தணன் காந்தி-அவன்
அன்று வகுத்தநன் னெறியினில் செய்வோம்; 4

பூமி முழுமையும் ஓர் குல மாகவே-இங்கு
பொலிந்துநல் அன்பில் உயர்ந்திடச் செய்வோம்
ஓம்எனப் போற்றியே எப்போதும் வாழ்த்தி-அந்த
உயர் தெய்வத்தின் அருள் ஓங்கிடச் செய்வோம். 5

புதிய தமிழ்நாடு
1950

புதிய தமிழ் நாடின்று தோன்றிற் றம்மா
புதுவாழ்வும் இன்றேதான் தோன்றிற்றம்மா
பதம் இழந்த தாயின்று பதவிபெற்ருள்
பகவதிநற் குமரியுமே உரிமை பெற்ருள்
இதமான தமிழரசும் ஏற்றம்பெற்றே
இனி உலகில் மேன்மேலும் ஓங்கிநிற்கும்
விதமான செந்தமிழில் பாடி ஆடி
மேலான கடவுளரை வாழ்த்துவோமே ! 1

வறுமையிலாத் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
வளமலியும் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
சிறுமையிலாத் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
தெய்வீகத் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
அறமலியும் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
அன்புமலி தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
குறைவிலாத் தமிழ்நாட்டைக் காண்போம் இன்றே
குவலயத்தில் மேன்மேலும் ஓங்கு வோமே. 2

பலமுகமும் பலமொழியும் கொண்ட தேவி
பாரதத் தாய் மேன்மைபெற உழைப்போம் என்றும்
நிலமிசையே அவள் என்றும் தலைமை பெற்று
நிகரற்ற தனியரசு செலுத்தக் காண்போம்.
நலமலிய வளமலிய ஞால மெல்லாம்
நல்லறங்கள் ஓங்கியே திகழக் காண்போம்.
கலிஒழிந்து புதியயுகம் தோன்றக் காண்போம்
கடவுளரின் அருளினுல் ஓங்கு வோமே- 3

தமிழன் வேண்டுவது

1928

உள்ளத்தோ டுடம்பிலும் உறுதி வேண்டும்
உயர் இமயம் எனப் பரந்த உள்ளம் வேண்டும்
கள்ளத் தனங்களெல்லாம் ஒழிய வேண்டும் ;
காதலொடு வீரமும் திகழ வேண்டும் ;
எள்ளற் குரியதீ வறுமை யின்றி
எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டும் ;
தெள்ளுதமிழ் மொழி மீண்டும் இமயத் தேறிச்
செகமெலாம் தனியரசு செலுத்த வேண்டும். 1

சாதிமத வேற்றுமைகள் ஒழிய வேண்டும்,
சமரசமெய்ச் சமய மிவண் வளர வேண்டும் ;
ஆதியிலே யிருந்தபடி அறம் வளர்ந்து
அன்பினோ டின்பவாழ் வோங்க வேண்டும்,
தீதிலதாய் நன்மையெலாம் ஓங்க வேண்டும்,
செந்தமிழிங் கொருதனிக் கோல் ஓச்ச வேண்டும்;
ஓதுபல பேர்களுடன் விளங்கு கின்ற
ஒருவனையிங் கேத்தியே வாழ வேண்டும். 2
ஆடலொடு பாடலும் திகழ வேண்டும்,

அன்புமதம் உலகமெலாம் பரவ வேண்டும் ;
வாடாமல் உயிர்களெலாம் வாழ வேண்டும் ;
வதைத்துயிரைத் தின்னும்மறம் ஒழிய வேண்டும் ;
கூடியே எல்லோரும் வாழ வேண்டும்,
கொலைகளவு புலையாதி ஒழிய வேண்டும் ;
நீடுதமிழ் வளர்ந்தோங்கி வைய மெல்லாம்
நிலையான தனியரசு செலுத்த வேண்டும். 3

புதிய தமிழன் பாட்டு
1927

பாரினி லேயினி யாருக்கும் அஞ்சோம்—இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாட்டினில் வந்தோம்;
சீருக்கெல் லாம்முத லாகிடும் தெய்வம்—அது
செய்தநன் னீதி நெறியினில் செல்வோம். (மன்) 1

சத்தியம் கூறும் வழியினில் செல்வோம்—என்ன
சங்கடம் நேரினும் நெறிநின்று நீங்கோம்;
மித்தைகள் யாவும் ஒழித்திந்த நாட்டில்—நாம்
மேலோர்க ளென்னஇம் மேதினி வாழ்வோம் (மன்)

பொய் புலை யாவையும் கொன்று பொசுக்கி—இந்தப்
பூமியில் தர்மத்தை நாட்டிட வந்தோம்;
ஐயங்கள் யாவும் தொலைந்தன இன்று—இனி
ஆயிரம் நேரினும் தர்மத்தைக் காப்போம். 3

தேவர்க ளென்னஇப் பூமியில் வந்தோம்—இந்தச்
சேதி மறந்துமே சிறுமையில் ஆழ்ந்தோம்;
யாவரும் போற்றிடும் தேவர்கள் நாமே—இதை
அறிந்தினி யென்றும் சிறந்திவண் வாழ்வோம். (மன்)

மக்கள் இனத்தில் கடையவ ரானோம்—இந்த 4
மாநிலத் தேநர கத்தினில் ஆழ்ந்தோம்;
துக்கம் துயரம் மிகுதியும் கொண்டோம்—இன்று
ஜோதிநல் லருளால் உண்மையைக் கண்டோம். 5

விடுதலை

பொன்னையும் வேண்டேன் புகழையும் வேண்டேன்
பொற்புறு மதிமுகத் தினராம்
கன்னியர் வேண்டேன், ககனமும் வேண்டேன்,
கடவுளே யிவையெலாம் வேண்டேன்
என்னிலும் இனிதாம் எதனிலும் இனிதாம்
ஏவரும் விரும்பிடு சுயேச்சை
தன்னையே வேண்டி யிருந்தனன் தமியேன்
தண்ணருள் புரிந்திடு வாயே.

தமிழ்

1923

தமிழினை அறியத் தமிழினை மொழியத்
தமிழினில் சந்ததம் பாடத்
தமிழினில் மகிழத் தமிழினில் வாழத்
தமிழனேன் விரும்பினன் என்றும்
தமிழியற் கவிகொண் டுலகினர் பரவும்
தண்டமிழ் வாணியே தாயே
அமிழ்தெனும் மொழியாய் அறிவுருவாளுய்
அடியனேற் கருள்புரி வாயே.

பாடலும் ஆடலும்

1924

பாட்டுப் படித்துநான் வாழ்வேன்—வேறு
பாடொன்றும் பட்டிட மாட்டேன் ;
ஆட்டங்கள் ஆடிநான் வாழ்வேன்—வேறு
அலுவல்கள் பார்த்திட மாட்டேன் ;
நாட்டியம் ஆடும் கடவுள்—எங்கள்
நாதன் அருள் எனக் குண்டு ;
தேட்டம் எனக்கொன்றும் இல்லை—இந்த
ஜெகமெலாம் என்னிடம் அன்றே. 1

வறுமையை நாட்டில் ஒழிப்பேன் ;—பெரு
வாழ்வுற என்றும் உழைப்பேன் ;
சிறுமையை நாட்டில் ஒழிப்பேன் ;—பெருஞ்
சீருற என்றும் உழைப்பேன் ;
அறிவினை நாட்டில் வளர்ப்பேன்—நல்
அன்பினை நாட்டில் வளர்ப்பேன்
நெறியினில் சென்றிவண் வாழ்வேன்—என்றும்
நீடிய புகழினைக் கொள்வேன். 2

அடிமையை நாட்டில் ஒழிப்பேன்—நல்
ஆண்மையை நாட்டில் வளர்ப்பேன் ;
கொடுமையை நாட்டில் ஒழிப்பேன்—இந்தக்
குவலயம் ஓங்கிடச் செய்வேன் ;
விடுதலை பெற்றிந்த நாட்டார்—மேலும்
மேலும் உயர்ந்திடச் செய்வேன் ;
கடவுளர் அருளினைப் பெற்றே—இந்தக்
காசினி ஓங்கிடச் செய்வேன். 3

அன்பு பெருகிடச் செய்வேன்—நல்
அறிவு பெருகிடச் செய்வேன் ;
இன்பம் பெருகிடச் செய்வேன்—துன்பம்
இல்லையென் றுகிடச் செய்வேன் ;
நன்பதம் பெற்றிந்த ஞாலம்—நாளும்
நாளும் உயர்த்திடச் செய்வேன் ;
இன்பத் தமிழினில் பாடி—நாளும்
இறைவனை யேத்தியே வாழ்வேன். 4

காற்று வாங்கும் காக்கை

1925

காற்று நன்ருய் வாங்கிக் கொண்டு—ஒரு
கவலையற் றிருந்திடும் காக்கை!
ஏற்றமான மரக்கிளையில்—மிக
இன்புற் றிருந்திடும் காக்கை!
நாற்றிசைக் குள்ளும் உன்போலே—நல்ல
நாகரிகர்களும் உண்டோ?
போற்றி உன்மீதொரு பாட்டு—இன்று
போந்ததென் உள்ளத்தில் வாழி! 1

தினமதி காலையில் விழிப்பாய்—உன்
தேகம் நலமுறக் குளிப்பாய்!
கனிகளும் காய்களும் தின்பாய்—கா
கா வென்று கத்தியே திரிவாய்!
மனமிக மகிழ்ந்துநீ பாடி—நெடு
வான வெளியெலாம் செல்வாய்!
கனமும் தனமும்இன் றேனும்—பெருங்
களிப்பான வாழ்க்கைவாழ்ந் திடுவாய்! 2

பச்சைப் பசேரென்ற கிளையில்—மிகப்
பாங்கா யிருந்திடும் காக்காய்!
இச்சை ஒன்றுண்டதைச் சொல்வேன்—இந்த
ஈன உலகினை விட்டே
பச்சைப் பறவை ஒன் ருகி—நான்
பாரெங்கும் உலவிட வேண்டும்
துச்சமா மக்களை விட்டு—நான்
தொலைவில் விலகிட வேண்டும். 3

நானும் உன்போல்ஒரு புள்ளாய்—இந்த
ஞாலத்தில் வாழ்ந்திட வேண்டும்;
மானிடர் வாழ்க்கையை வேண்டேன்—உன்போல்
வானத்தில் வாழ்ந்திட வேண்டும்;
ஞானத்தின் உருவான தேவை—நான்
நாள்தோறும் பாடிட வேண்டும்;
கானத்தில் கலந்திவண் ஆடி—நான்
கடவுளர் வாழ்வுறல் வேண்டும். 4

குளித்து முழுகும் குருவீ

1922

குளித்து முழுகும் குருவீ—உன்றன்
கோலத்தைக் கண்டு மகிழ்ந்தேன் ;
தெளித்த நன்னீரில் குளிப்பாய்—உன்
சிந்தையின் பெய்திக் களிப்பாய். 1

சுத்தத்தை நாடிக் குளிப்பாய்—உன்
தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தேன் ;
பித்தர்கள் எண்ணிலர் மாந்தர்—அவர்
பெரிதும் அசுத்தத்தில் மாள்வார். 2

சுத்த உடைகள் உடுத்தார்—அவர்
தூய குணங்களைக் கொள்ளார்
மித்தைகள் பேசிக் கழிப்பார்—அவர்
மெலிந்து வருந்திக் கழிவார். 3

சின்னஞ் சிறிய குருவீ—உன்றன்
சீலத்தைக் கண்டறிந்தேனும்,
என்னின மாந்தர்கள் உன்றன்
இயற்கையைக் கொள்ள லாகாதோ ? 4

பறவையும் விலங்கினம் தானும்—இந்தப்
பாரினில் சுத்தத்தை நாடும்
அறிவில் மிகுத்தவர் என்பார்—இந்த
அவனியில் மானிடர் என்னே ! 5

நோயிலும் பேயிலும் வாழ்வார்—அவர்
நுவலரு நரகினில் வாழ்வார் ;
ஆயிரம் கூறியும் என்னே ?—அவர்
அறிவு திருந்திடல் என்றோ ! 6

வாரத்திற் கொருமுறை குளிப்பார்—அரை
அரை மாதத்திற் கொருமுறை குளிப்பார் ;
சீரற்ற மாந்தரிங் கிவர்கள்—இவர்
தினம் தினம் குளித்திடல் என்றோ ? 7

பன்முறை நித்தம் குளிப்பாய்—உன்றன்
பான்மையைக் கண்டு மகிழ்ந்தேன் ;
என்னவர் நன்குறு மாறு—இதை
இசைத்து வைத்தே னடி தோழி ! 8

நல்லவ ராகவே வாழ்வீர்

1948

நல்லவ ராகவே வாழ்வீர்—இந்த
நாட்டினில் வாழும்நன் மக்காள்
வல்லவ ராவதில் ஒன் றில்லை—மிக்க
மதியின ராவதில் ஒன்றில்லை
செல்வ ராவதில் ஒன்றில்லை—வேறு
சிறப்பின ராவதில் ஒன்றில்லை.
நல்லவர் என்றவோர் சொல்லே—இந்த
ஞாலத்தில் மேன்மை அளிக்கும் 1

பல்கலை கற்றவ ரேனும்—பெரும்
பாவலர் நாவல ரேனும்
கொல்லையில் வாழ்பவ ரேனும்—நெடுங்
கோபுரம் வாழ்வ ரேனும்
மல்லல் நெடும்புவி யெல்லாம்—தனி
மாட்சியில் ஆள்பவ ரேனும்
நல்லவ ரென்ற தோர் சொல்லே—இந்த
ஞாலத்தில் மேன்மை அளிக்கும். 2

பஞ்சத் துயரம்

பஞ்சத்தில் வருந்து கின்ருர்—நம்
பழந்தமிழ் மக்கள் அவர்க் கிரங்குவிரே!
கஞ்சியும் இல்லை ஐயோ—ஒரு
காலணுக் காசும் அவர்கையில் இல்லை;
மிஞ்சிய வறுமையிலே—அவர்
விலங்குக ளென்ன இலைதழை தின்று
துஞ்சாமல் வாழ்கின் ருர்—இந்தத்
துயரத்தைத் தெய்வமே தீர்க்க வேண்டும். 1

மாடுகள் தின்னும் தழை—பல
மரங்களின் காய்களும் கனிகளுடன்
ஆடுகள் தின்னும் தழை—இன்னும்
அதிசய மான பல கிழங்குகளும்
நாடியே தின்று நிதம்—அவர்
நமனிடம் போராடி வாழ்கின்ருர்
ஓடியே உதவிடு வீர்!—உமது
உடன் பிறந்தார் அவர் உயிர்காப் பீர். 2

சொல்லொணுக் கொடும் பஞ்சம்—இங்கு
சொல்லி முடியாது மக்கள் துயரமெல்லாம்
நல்ல மனைவி மக்கள்—இன்னும்
நாடரும் பொருள்களைத் துறக்கின்ருர்
அல்லல் மிக அடைந் தார்—அவர்க்கு
ஆண்டவன் அருள்தான் வேண்டும் விரைவில்
செல்வத் தமிழ்நாட் டீர்—நீர்
சீக்கிரம் அவர்துயர் தீர்க்க வாரீர்! 3

சில ஆண்டுக்கு முன் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், செங்கற்பட்டு ஜில்லாக்களில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது மக்களின் நிலையை மேற்கண்ட பாடல்கள் வர்ணிக்கின்றன.

தாழ்ந்த வகுப்பார் பாடல்
1920

சென்னை மீன் இலாகா அதிகாரியாய் இருந்த ஸ்ரீமான். ராமசாமி நாயுடு, எம். ஏ. அவர்களின் விருப்பப் படி பாடியவை.

நல்ல நாள் வந்த தென்று பாடுவோம்—எங்கள்
நலிவுகள் தீர்ந்த வென்று பாடுவோம்.
எல்லாம் வல் ஈசன் தன் அருளை—நாங்கள்
ஏத்திப் புகழ்ந் தென்றும் பாடுவோம். 1

நற் காலம் வந்தது நமக்கு—இனி
நாட்டினில் மேன்மையுற்று வாழ்வோம்—
தற்காலச் சிறுமையை ஒழிப்போம்—இனித்
தரணியில் சிறப்புடன் வாழ்வோம். 2

அறஞ் செய விரும் பென்ற ஔவை—நல்
அமுத மொழி பற்றி வாழ்வோம்.
மறம், பொய் களவுகளை ஒழிப்போம்—இனி
மக்களில் மேன்மை பெற்று வாழ்வோம் 3

கல்வியில் லாதவர்கள் மூடர்—அவர்
கண்ணிருந்தும் குருடரெனல் கண்டோம்.
கல்வி பயின்றறிவைப் பெறுவோம்—இங்கு
கல்வியே செல்வமெனக் கொள்வோம் 4

பக்தி புரிந்துலகில் வாழ்வோம்—என்றும்
பாரினில் ஈசனைத் தொழுவோம்—
சக்தியுள்ள தெய்வம் நம்மைக்காக்கும்—அதைத்
தஞ்ச மெனக் கொண்டுலகில் வாழ்வோம்.

கள்ளுச் சாராயம் குடித்து-நாங்கள்
கருத்தை யிழந்துயிரை இழவோம்.
பள்ளத்தி னின்றினியாம் எழுந்து—இனிப்
பாரினில் மேன்மை பெற்று வாழ்வோம்— 6

குடியின் சிறுமைகளைக் கண்டோம்—இனிக்
குடித்து வெறித்துலகில் திரியோம்
படித்துத் திருந்தியிவண் சிறப்போம்—இந்தப்
பாரினில் மேன்மை யினி வகிப்போம். 7

தேவர்கள் வாழ்ந்த இந்த நாட்டில்—நாங்கள்
சிறுமையில் வீழ்ந்தினியும் வருந்தோம்—
யாவரும் வையகத்தில் போற்ற—நாங்கள்
யாவருக்கும் மேலாக வாழ்வோம்— 8

சிறுமைகள் அனைத்தையும் ஒழிப்போம்—எங்கள்
தீமைகள் அனைத்தையும் ஒழிப்போம்—
வறுமைகள் அனைத்தையும் ஒழிப்போம்—இனி.
வையகத்தில் மேன்மை பெற்றுச் சிறப்போம்—9

தருமத்தைப் பின்பற்றி வாழ்வோம்—நாங்கள்
சக்தியத்தைப் பற்றி உயிர் வாழ்வோம்.
கருமங்கள் எவற்றைச் செய்தாலும்—நாங்கள்
கடவுளைக் கை தொழுது வாழ்வோம்— 10

தொல்லை யிழைத்திடும் பையல்

1922

தொல்லை யிழைத்திடும் பையல்—மிகத்
துட்டத்தனம் செய்யும் பையல்
சொல்லினைக் கேளாத பையல்—மிகச்
சுட்டித் தனம் செய்யும் பையல்
பல்லினைக் காட்டிடும் பையல்—மிகப்
பாசாங்கு செய்திடும் பையல்
அல்லும் பகலும் இங் கென்றும்—ஓயா
ஆர்ப்பாட்டம் செய்திடும் பையல் 1

கல்லையும் மண்ணையும் நாடி—மிகக்
கருத்துடன் தின்றிடும் பையல்
நல்லதும் தீயதும் ஒன்ருய்—என்றும்
நாட்டத்தில் கொண்டிடும் பையல்
வெல்லத்திற் கரியதோர் பையல்—பொய்
வேடங்கள் போட்டிடும் பையல்.
செல்வச் சிறுமணிப் பையல்—பெரும்
தெய்வங்கள் வாழ்த்திடும் பையல். 2

விளக்கைப் பிடித்திடும் பையல்—அது
வேண்டுமென் ருடிடும் பையல்
களக்கமில் உள்ளத்துப் பையல்—எங்கள்
கண்ணினுள் வாழ்ந்திடும் பையல்
சளக்குகள் செய்திடும் பையல்—என்றும்
சண்டைகள் போட்டிடும் பையல்
அளக்கரும் தொல்லை செய் பையல்— எங்கள்
ஆர்வமிகும் மணிப் பையல். 3

வானத்தைப் பார்த்திடும் பையல்—அந்த
மதியினைக் கூப்பிடும் பையல்
கானத்தில் மகிழ்ந்திடும் பையல்—நற்
கவிகள் படித்திடும் பையல்
தேனைத் தினித்திடும் பையல்—எங்கள்
சிந்தையில் வாழ்ந்திடும் பையல்
வானத்துத் தேவர்க ளெல்லாம்—என்றும்
வாழ்த்தும் சிறுமணிப் பையல். 4

முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி

1962

பாரியென் றொரு வள்ளல்—நம்
பழந் தமிழ் நாட்டிலே வாழ்ந்தான்.
ஈரமும் வீரமும் உடையான்—அவன்
இணையிலாக் கொடையும் உடையான். 1

மாரி யெனவே வழங்கும்—அவன்
வண்மையைக் கண்ட புலவர்
பாரியை வியந்து புகழ்ந்தே—அன்று
பாடல்கள் பாடி மகிழ்தார். 2

மனிதர்க்கு மட்டுமே யன்றி—அவன்
வாயிலாப் பல வுயிர்க் கட்கும்
கனிதரு நெஞ்சின னாகி—பெருங்
கடவுள் என அருள் புரிந்தான். 3

பறம்பு மலை மன்ன னான—அந்தப்
பாரி ஒரு நாள் தேர் ஏறி
அரும்பு முல்லைகள் மலர்ந்த—அந்த
அழகு மலை வளம் கண்டான். 4

முல்லைச் செடி ஒன்று கண்டான்—கொடு
முதுவேனில் காலம் அதுதான்
மெல்லிய செடி அது வாடி—மிக
மெலிந்து வருந்திநின் றதுவே. 5

படர் கொம்பின்றியே தவித்த—அந்தப்
பசுங் கொடி முல்லையைக் கண்டான்
கடலெனும் கருணைமிக் குடையான்—தன்
கனக நற் றேரினை விட்டான். 6

முல்லை படரத் தேர்விட்டு—அந்த
முழுமகன் பரியுடன் நடந்தான்
கல்லும் முள்ளும் மிகுந்த—அந்தக்
கனவரை நெடுவழி கடந்தான். 7

கால்நடையாய் மீண்ட வேந்தை—அன்று
கண்டவ ரெல்லாம் வியந்தார்
மாலவ னென்னவே வாழ்க—என்று
வாழ்த்தி வணங்கி மகிழ்ந்தார். 8

முல்லைக்குத் தேரீந்த பாரி—தமிழ்
மொழியிடை என்றும் வாழ்கின்றான்
எல்லையில் கருணைக் கடலாம்—அவன்
இசை யென்றும் பாடியே வாழ்வோம் 9

மரம் செடி கொடிகளைக் காப்போம்—அவை
மனிதருக்கு அருந்துணை யாகும்
மரம் செடி கொடியால் நம் வாழ்வு—இதை
மறவாமலே யென்றும் வாழ்வோம். 10

சேதுவை என்று காண்பேம்?

(சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை
இறந்தபொழுது பாடியது-1960)

ஓதரும் துயரம் உற்றேம்
உன்னை நாம் பிரிந்த தாலே
சேதுவே என்று காண்பேம்
செந்தமிழ்ச் செல்வா உன்றன்
தீதறு தமிழை என்று
செவியுறக் கேட்பேம் அந்தோ
நீதியில் காலனார் தம்
நீதியென் நிகழ்த்து வோமே 1

தமிழுக்கே பிறந்து வாழ்ந்தாய்
தமிழினை வாழ வைத்தாய்
தமிழ் இன்பம் உணர்த்தி நின்றாய்
தமிழ் நலம் பேசி நின்றாய்
தமிழ் இன்பம் உணரா வானோர்
நாடு சார்ந் தவருக் கின்று
தமிழ் இன்பம் உணர்த்துவாய் கொல்
தலைவனே சாற்று வாயே 2

தமிழ அர சோங்கும் இந்நாள்
தலைவ நீ யெமைப் பிரிந்தாய்
தமிழ் நாட்டில் இன்று மெத்த
வேலையுண் டதனால் நீ தான்
தமிழ் நாட்டில் மீண்டும் தோன்றித்
தமிழினை ஓங்கச் செய்வாய்
தமிழ் உருவான உன்சீர்
தழைத்து நீடுழி வாழி. 3

காந்தி பஞ்சகம்

1920

நாட்டினுக் குயிர்அளித்தாய் ;
ராட்டினுல் உயிர் அளித்தாய் ;
பாட்டினில் அடங்கா உன்றன்
பண்பிணைப் போற்றுகின்றேன்.
கேட்டிணை ஒழிக்க வந்தாய்
கேடில்சீர் அளிக்க வந்தாய் ;
காட்டின வழியில் சென்ருல்
கதிபெறும் உலக மெல்லாம். 1

அன்புநன் னெறிமறந்த அவனிக்கன்
புணர்த்த வந்தாய் ;
துன்பங்கள் ஒழிக்க வந்தாய் ;
துயரங்கள் போக்க வந்தாய் ;
இன்பங்கள் ஆக்கி யென்றும்
இந்தமா நிலத்தோர்கெல்லாம்
நன்பதம் அளிக்க வந்தாய்
ஞாலத்தில் உயர்ந்தாய் நீயே. 2

சத்தியம் மறந்தோர்க் கெல்லாம்
சத்தியம் உணர்த்த வந்தாய் ;
மித்தைகள் காட்டியிங்கு
மெய்யறி வுணர்த்த வந்தாய் ;
புத்துயிர் அளிக்க வந்தாய் ;
பொங்குபே ரருளால் மீண்டும்
புத்தனுர் வந்தாரென்ன,
போற்றி ஓம் காந்தி போற்றி. 3

அடிமைவாழ் வுழன்ற நாட்டார்க்
காண்மையை உணர்த்த வந்தாய் ;
மிடிமைகள் சிறுமையாதி
மென்மைகள் குலைக்க வந்தாய் ;
கடவுளர் அருளால் வந்தாய்
கலங்கிய உலகத்தோர்க்கு,
விடுதலை அளிக்க வந்தாய் ;
வீரனே நீடு வாழி ! 4

கலியினை அழிக்க வந்தாய் ;
கவலைகள் ஒழிக்க வந்தாய் ;
நலிவுகள் ஒழிக்க வந்தாய் ;
நாடெலாம் வாழ வந்தாய் ;
வலிமைகள் அளிக்க வந்தாய்
வாழ்வுகள் அளிக்க வந்தாய் ;
நிலவிய காந்தி ! 'நின்சீர்'
நீடூழி வாழி மாதோ. 5

புண்ணியம் திரண்டுவந்த புனிதன்

1952

விருத்தம்

பரிதிமதி உள்ளளவும் நின்பேர் வாழும்
பாரிலுள்ளோர் நின்பேரை மறவார், ஐயா!
சரிதையிலே இல்லாத புதுமை யாகச்
சன்மார்க்கப் போர்புரிந்து எம்மை ஆண்டாய்;
கருதரிய விடுதலைப்பே றெய்தி நாங்கள்
காசினியில் புதுவாழ்வு வாழச் செய்தாய்;
வரதனென வந்தாய்நின் நாமம் வாழி!
மகாத்ம! நின் திருநாமம் நீடு வாழி! 1

வேறு

அன்பினைப் பெருக்கச் சொன்னாய்,
அறத்தினை வளர்க்கச் சொன்னாய்;
துன்பமும் துயரு மின்றித்
தொன்மைசேர் இந்த நாட்டார்
நன்பதம் எய்தி வாழ,
நன்னெறி காட்டி நின்றாய்;
மன்பதை உய்ய வந்த
மகாத்ம? நின் நாமம் வாழி! 2

உண்மையே தெய்வம் என்றாய்,
உலகினுக்கு ஒளியாய் நின்றாய்;
திண்மைசேர் நெஞ்சம் கொண்டு,
தீமையை எதிர்த்து நின்றாய்;
மண்ணவர் புதுவாழ் வெய்த
வருந்திச்செய் மாத வத்தின்
புண்ணியம் திரண்டு வந்த
புனித! நின் நாமம் வாழி! 3

லஜபதி வாழ்த்து

1919

உலகெலாம் படைத்த ஒருவன தருளால்
இலகுபன் ஞட்டுளும்' ஏற்றமிகு நாடு ;
இறைவன தாடற் கிசைந்த நன்ஞடு ;
தரையினில் தருமம் குறையும் காலை
எம்பிரான் தோன்றி எம்மையாள் நாடு ;

நம்பிரான் கண்ணன் தரும் அறநாடு ;
ராமன், பார்த்தன், நலம்மிகு கன்னன்,
காமனைவென்ற புத்தன், சங்கரன்,
வள்ளுவன், கம்பன், வள்ளலெம் பாரி,
தள்ளரும் பெருமைத் தக்கோர் நாடு ;

எண்ணரு முனிவரும் இயம்பரும் பெரியரும்
விண்ணவர் பலரும் விளங்கிய நாடு ;
தன்னுயிர் போலத் தரணியில் வாழும்
மன்னுயிர் காக்கும் மன்னவர் நாடு ;
ஆதியில் ஞானம் தோன்றிய நாடு ;

வேதம் நான்கும் விளம்பிய நாடு ;
கீதை கேட்ட கேடறு நாடு ;
வேதியர் சிறந்து விளங்கிய நாடு ;
நீதியும் அறமும் நிலவிய நாடு ;
கோதிலாப் பெருமைகள் குலவிய நாடு ;

செல்வமும் கல்வியும் சிறந்தொளிர் நாடு ;
இயற்கையின் வளமும் இன்ப மும்பெருகிச்
செயற்கரும் விண்ணகம் எனத் திகழ்நாடு ;
பாரத நாடு பழம்பெரு நாடு ;
"நாரத கான நலந்திகழ்" நாடு ;

வீரரும் புலவரும் விளங்கிய நாடு
காரினில் மறைந்த மதியென இன்று
முன்னாள் மாண்புகள் முற்றும் இழந்து
இன்னாள் வீழ்ச்சி யுற்றிருக்கும் காலை

இறைவன தருளால் எம்பெரு நாட்டின்
குறைதவிர்த் திடுவான் குவலயத் தின்று
தோன்றினர் ஒரு சிலர் ; சொல்லரும் பெரியர் ;
வான்றிகழ் அமரர் மண்ணில் வந்தனையர் ;
பாரத நாட்டைப் பண்டைய நிலையில்

சீருறச் செய்யும் சிந்தையே யுடையர்,
அல்லும் பகலும் அதனையே கொண்டு
நல்லன புரியும் நன்மையே யுடையர்,
அன்னவர் திருவடி அநுதினம் தொழுவேன்.
தன்னிக ரில்லாத் தக்கோர் அவருள்

சித்தரும் முனிவரும் சேர்ந்து வாழ்நாடு
வித்தகன் பார்த்தன், மெல்லியல் துரோபதை
நத்தி வாழ்ந்திருந்த நலம் பெறு நாடு,
பஞ்ச நதத்தால் பலவளம் பொலியும்
பஞ்சநத நாட்டின் பண்டையத்தவமும்

ராதாகிருஷ்ணன் நற்றவப் பயனும்
மாதா செய்த மாதவப் பயனும்
சேர்ந்து தோன்றிய செப்பரும் பெரியன்
ஆர்ந்த நம் துன்பம் தீர்ந்திட வந்தோன்
ஆண்மையும் வீரமும் அறிவும் கொண்டோன்

சேண்மையில் இருந்தும் செய்வன செய்தோன்
கேண்மை யில்லாதார் நாடு கடத்த
மாண்டலே தன்னில் மாண்புடன் இருந்தோன்

பின்னரும் அன்னவர் பிழை படு செயலால்
முன்னோர் * பாதலம் எனப் புகல் நாட்டில்

ஐந்து நீள் ஆண்டு அஞ்ஞாத வாசம்
செய்தும் பாரத சேவையே செய்தோன்
எத்தனை காலம் இருட்சிறை யிடினும்
தத்துநீர்ப் பாஞ்சா லந்தனை விரும்புவோன்
மன்னவன் அருளால் வனவாசம் நீங்கி

இன்னும் சில தினம் தன்னிலிங் குறுவோன்
லஜபதி யென்னும் நாமம் கொண்ட
நரபதி யென்றும் நானிலத் துயர்க!
ஐம்பத்தைந்தாண்டு அவனியில் இருந்தவன்
இம்பரில் பல்லாண் டிருந் தெமைக் காக்க!

என்றும் இளைஞனாய் எம்மவர்க் குழைப்பவன்
என்றும் இளைஞனாய் இன்புடன் வாழ்க!
மக்களும் குலமும் மாண்புடன் ஓங்க!
திக்கெல்லாம் அவன்புகழ் தினமும் சிறக்க!
அன்னான் போன்றோர் அளப்பிலர் அவனியில்

இன்னாள் தோன்றி யெமை யிவண் காக்க!
பாரத நாடு பண்டைய நாடாய்ச்
சீரெல்லாம் பெற்றுச் சிறந்திவண் ஓங்க!
சிவனாய், மாலாய், ஜெகன் மாதாவாய்!
தவமார் ஏசு நாதர், அல்லா வாய்

எண்ணிலாப் பெயரும், எண்ணிலா வடிவும்,
எண்ணிலா நலமும் இயைந்து விளங்கி
அவரவர் தொழுமுறை அவரவர்க்கருளும்
தவக் கடலான தனிப் பெருங் கடவுள்
எல்லாம் வல்ல இறைவன், எம்பெருமான்,
நல்லோன் அடிகள் நாளும் தொழுவனே.

* பாதலம்—அமெரிக்கா

விநோபாவா வேண்டுகோள்

விருத்தம்

ஊரிலே செல்வர்களாய் வாழும் நல்லோர்
ஒன்றுமிலா ஏழைகளுக் குதவ வேண்டும்
சீரெலாம் பெருகுதற்கு வழியீ தாகும்
செல்வர்களே ஏழைகளுக் குதவி செய்வீர்
பாரிலே சிலர் உண்டு களித்து வாழப்
பலகோடி மக்கள் இங்கே வருந்துகின்றார்
கார்போலும் கருணையுடன் உதவ வேண்டும்
கடவுள் உமக் கருள்செய்வார் கடமை செய்வீர். 1

நிலம்படைத்த நல்லோர்கள் நிலத்தோர் பாகம்
நிதிபடைத்த செல்வர்கள் நிதியோர் பாகம்
பலம்படைத்திங் கெளியோர்கள் உய்யுமாறு
பரிவுடனே உதவுவீர் பாவம் தேய்ந்து
நலம்படைத்து வறுமை ஒழிந் துலகமெல்லாம்
நல்வாழ்வு தோன்றிடுமால் நாளும் இங்கே
குலம்படைத்த பெரியோரே தேசம் உய்யக்
கும்பிட்டேன் வேண்டினேன் குறைதீர்ப் பிரே. 2

ஆறில் ஒரு பங்குநிலம் தாரீ ரென்று
அருள்படைத்த விநோபாவா வேண்டு கின்றார்
மாறிலாக் கருணையுளம் படைத்த செல்வர்
வண்மையுடன் உதவுவீர் வறுமை போக்கீர்
சோறிலா ஏழைமக்கள் துயரம் தீரும்
சொல்லொணு நலங்கள் பல விளையும் இங்கே
நீறுபடத் தீமையெலாம் ஒழியப் பாரில்
கிருத யுகம் நிலவிடவே துணைசெய் வீரே. 3

அன்போங்க வையகத்தில் அறங்கள் ஓங்க
அறிவோங்க ஆக்கங்கள் அனைத்தும் ஓங்க
துன்பங்கள் துயரங்கள் எல்லாம் நீங்க
சொல்லொணு வறுமைநிலை தொலைந்து நீங்க
மின்போலும் வாழ்க்கை இது ; செல்வம் நில்லா,
விரைந்தோடி உதவுவீர் மெலிந்தோ ருக்கே
இன்பங்கள் ஓங்கவே எங்கும் ஓங்கும்
ஈசஞர் அருள் ஓங்க ஏத்துவோமே. 4

பல்லாண்டு வாழ்க நேரு

1961

மேருபோல் உயர்ந்த மேலோன்
    விழுமிய குணங்கள் மிக்கோன்
காரெனும் கருணை வாய்ந்தோன்.
    கலங்காத ஞான தீரன்
சீரெலாம் எமக்கிங் கோங்கத்
    தினந்தோறும் உழைத்து வாழ்வோன்
பாரெல்லாம் போற்றும் நேரு
    பல்லாண்டு வாழி மாதோ. 1

எழுபதின் மேலே சென்றும்
    இளமையில் குமரன் போல்வான்
எழுதரு நலங்கள் வாய்ந்தோன்
    ஏற்றமிக் குடையோன் எந்தாய்
பழுதிலாப் பாரதத்தைப்
    பாரினில் உயர்த்தி வாழ்வோன்
பழமைசேர் பொதியம் போலப்
    பாரினில் சிறந்து வாழி. 2

அன்னை பாரதத்தின் சிந்தை
    அல்லும் ஒண் பகலும் கொண்டோன்
பின்னை ஓர் சிந்தை யில்லான்
    பெருந்தவப் பயனாய் வந்தான்.
இந்நிலம் தன்னில் எங்கள்
    இணையற்ற தலைவன் நேரு
பன்னலம் புரிந்து நாளும்
    பல்லாண்டு வாழி மாதோ. 3

மகான் வ. வெ. சு. ஐயருக்கு

1925

அருவி நீர் ஆடச் சென்றீர் !
அருவியில் கலந்து விட்டீர்
பெரிதும்யாம் துயரமுற்றேம்
பேசொணுத் துயரம் உற்றேம்
திருவுடை மகளும் நீரும்
தேவர்க்கு விருந்தாய் விட்டீர்
வருதுயர் கருதீனீர் கொல்
வண்டமிழ் நாட்டுக் கெல்லாம். 1

குருகுலம் கண்டீர் இந்தக்
குவலய மெல்லாம் போற்றப்
பெருநலம் புரிய நின்றீர்.
பெருஞ் செயல் கருதி நின்றீர்
வருநலம் கருதி நின்றேம்
வானிடி வீழ்ந்த தென்ன
அருவியில் வீழ்ந்தீர் என்ருர்
ஐயகோ உலகம் என்னே! 2

வையகத் தெழிலின் மிக்க
மாண்புயர் பாவநாசத்
தெய்விகக் காட்சி நோக்கிச்
சேரமா தேவி சென்றீர்
உய்வழி செய்வீ ரென்றிங் குறுதியில்
வாழ்ந்தோம் உள்ளம்
நைவழி செய்து விட்டீர்
நன்றுகொல் நவிலு வீரே 3

அடிமை வாழ் வுற்ற நாட்டுக்
காண்மையை உணர்த்த வந்த
விடுதலைக் குழுவில் வந்தீர்
வேலைகள் முடியா முன்னர்
திடிரெனச் சென்ற தென்னே!
தேயத்தை மறந்தீர் கொல்லோ
சுடரொளி வதனத் தோன்றல்
சுப்பிர மணியக் கோவே. 4

பைந்த மிழ் மறந்தீர் கொல்லோ
பாட்டினை மறந்தீர் கொல்லோ ?
செந்தமிழ்க் கம்பனார்தம் தீங்கவி
மறந்தீர் கொல்லோ
அந்தரம் புகுந்து கம்பன்
அருகிருந்து அவன் வாக் கெல்லாம்
சிந்தையில் உவகை பொங்கக்
கேட்டிரோ செப்புவீரே. 5

சாந்தமும் தயையும் தங்கும்
தவமேனி என்று காண்பேம்
தீந்தமிழ்த் தீரவாக்கிங்
கென்றுயாம் செவியில் கேட்பேம்
மாந்தரில் மேலோய் எங்கள்
மனத்திடைத் திகழும் கோவே
நாந்துயர் அடையச் சென்றீர்
நன்றுகொல் நவிலுவீரே. 6

வீரத்தை வளர்க்க வந்தீர்
வீரரை ஆக்க வந்தீர்
வீரமே உருவா நின்றீர்
வீரவாழ் வெய்தி நின்றீர்

வீரத்தில் வாழ்ந்த கன்னி
வீழ்ச்சியில் வீழ்ந்த போது
வீரத்தில் பாய்ந்து விட்டனர்
வீரர்கள் பெரிய வாழ்வே. 7

செத்தவர் உடலம் சாகச்
சீவன் சாவின்றி யென்றும்
புத்துயிர்பெற்று மீளும்
என்பர்கள் புலமை யோர்கள்
எத்தனை வேலை உண்டு
நாட்டிலே அன்பர் கோவே
புத்துடல் பெற்று மீள்வீர்
பல்லாண்டு புவியில் வாழ்வீர் 8

நிகரற்ற பாரதி

1957

பாட்டினுல் உலகத்தை வாழ வைத்தாய்
பாரதியே நின்பேரை மறவோம் என்றும்
நாட்டிலே கல்வி முதற் கலேக ளெல்லாம்
நாள்தோறும் ஓங்கியே வளரச் செய்வோம்
ஓட்டியே வறுமை முதல் தீமையெல்லாம்
உலகத்தில் புது வாழ்வு நிலவச் செய்வோம்
காட்டிய நின் நெறியிலே சென்று நாங்கள்
காசினியில் கடவுள் நெறி ஓங்கச் செய்வோம் 1

கொலே களவு புலேயாதி ஒழியச் செய்வோம்
குவலயத்தில் புதிய யுகம் தோன்றச் செய்வோம்
தலேயான தமிழ் மொழியை ஓங்கச் செய்வோம்
தாரணியில் சன்மார்க்கம் தழைக்கச் செய்வோம்
பலசாதி வகுப்பு நிறப் போர் ஒழிப்போம்
பாரெலாம் ஒன்ருக நிலவச் செய்வோம்
நிலவிய சீர்க் கவியரசே நின் பேர்வாழி
நிகரற்ற பாரதியே வாழி வாழி 2

இல்லேயென்ற கொடுமை யெங்கும் யிலதாச் செய்வோம்
ஏழை செல்வர் என்ற நிலேஇலதாச் செய்வோம்
கல்வியிலா மனிதர் என்போர் இலதாச் செய்வோம்
கலேகளெல்லாம் ஓங்கியே வளரச் செய்வோம்
நல்லதெல்லாம் பெருகியே வளரச் செய்வோம்
நாட்டிலே தீமையெல்லாம் ஒழியச் செய்வோம்
அல்லல் இல்லே அல்லல் இல்லே அல்லல் இல்லே
அவனியெலாம் அல்லல் இன்றி வாழ்விப்போமே. 3

வாழ்க பாரதி நாமம்

1960

வாழ்க பாரதி நாமம், வாழ்க பாரதி பாடல்
வாழ்க பாரத மென்று பாடுவோமே
வாழ்க செந்தமிழ் நாடு வாழ்க செந்தமிழ் அன்னை
வாழ்க நல் அறமென்று பாடுவோமே. 1

வந்தே மா தர மென்ற மாகவியை வாழ்த்துவமே
மாதாவைப் பாடியநம் மாகவியை வாழ்த்துவமே
பந்தம் ஒழிக்க வந்த பாவலனை வாழ்த்துவமே
பைந் தமிழை வாழ்வித்த பாவலனை வாழ்த்துவமே 2

கண்ணனைப் பாடியநம் கவியரசைப் பாடுவமே
கலிஒழியப் பாடியநம் கவியரசைப் பாடுவமே
பெண்அரசி பாஞ்சாலி பெருஞ்சபதம் பாடியநம்
பேசரிய பாரதியைப் பேசிப் பரவுதுமே. 3

சக்தி சக்தி யென்ற தமிழ்க் கவிவைப் பாடுவமே
தமிழை வளர்த்தருளும் தக்கோனைப் பாடுவமே
பக்தி வளர்த்தருளும் பாவலனைப் பாடுவமே
பாரில் நிகரற்ற பாரதியைப் பாடுவமே. 4

அன்பு வளர்த்த அருட்கவிதன் பேர் வாழி
அச்சம் ஒழித்த அமரகவி பேர் வாழி
இன்பத் தமிழ் பாடி ஏற்றம் நமக் களித்த
ஈடற்ற பாரதிபேர் என்றென்றும் வாழியவே 5

பாரதி நாமம் பாரில் என்றும் ஓங்குகவே
பாரதி பாடல் பாரெங்கும் ஓங்குகவே
சீரார் தமிழ் அரசு தேசத்தில் ஓங்குகவே
தெய்வத் திருவருளால் சீரெலாம் ஓங்குகவே

வாழ்க நேரு

1960

வாழ்க நேரு வாழ்க நேரு வாழ்க வாழ்கவே
வாழ்க நமது பரத நாடு வாழ்க வாழ்கவே 1

எழுபதின்மேல் வாழும்நே நரு இனிது வாழ்கவே
பழுதிலாமல் ஆண்டு நூறு பாரில் வாழ்கவே. 2

நாடெல்லாம் போற்றும் நேரு நாளும் வாழ்கவே
ஈடில்லாத எங்கள் நேரு இனிது வாழ்கவே. 3

உலக மெல்லாம் போற்றும் நேரு ஓங்கி வாழ்கவே
திலகமான எங்கள் நேரு சிறந்து வாழ்கவே. 4

ஜாதி நிறப் போர் ஒழிந்து தருமம் ஓங்கவே
நீதி எங்கும் ஓங்க எங்கள் நேரு வாழ்கவே. 5

வறுமை நீங்கிச் சிறுமை நீங்கி வளங்கள் ஓங்கவே
அறிவும் அன்பும் ஓங்கி வையம் அல்லல் தீர்கவே. 6

போர்கள் சூழ்ச்சி யெங்கும் நீங்கி அமைதி பொலிகவே
சீர் மலிந்து வைய மெல்லாம் சிறந்து வாழ்கவே 7

புண்ணியம் திரண்டு வந்த புனிதன்
1953

பரிதிமதி உள்ளளவும் நின்பேர் வாழும்
பாருளோர் நின் பேரை மறவார் ஐயா
சரிதையிலே இல்லாத புதுமை யாகச்
சன்மார்க்கப் போர்புரிந்து எம்மை ஆண்டாய்
கருதரிய விடுதலைப் பேறெய்தி நாங்கள்
காசினியில் புதுவாழ்வு வாழச் செய்தாய்
வரதனென வந்தாய்நின் நாமம் வாழி!
மகாத்ம நின் திருநாமம் வாழி வாழி! 1

வேறு

அன்பினைப் பெருக்கச் சொன்னாய்
அறத்தினை வளர்க்கச் சொன்னாய்
துன்பமும் துயரு மின்றித்
தொன்மை சேர் இந்த நாட்டார்
நன்பதம் எய்தி வாழ
நன்னெறி காட்டி நின்றாய்
மன்பதை உய்ய வந்த
மகாத்ம நின்நாமம் வாழி! 2

உண்மையே தெய்வம் என்றாய்
உலகினுக்கு ஒளியாய் நின்றாய்
திண்மைசேர் நெஞ்சம் கொண்டு
தீமையை எதிர்த்து நின்றாய்
மண்ணவர் புதுவாழ் வெய்த
வருந்திச் செய் மாதவத்தின்
புண்ணியம் திரண்டு வந்த
புனித நின் நாமம் வாழி! 3

எங்கள் அப்பாவுக்கு

1929

சிவத்தினை அகத்துட் கொண்டாய்
செந்தில்வேற் கந்தன் தன்னைத்
தவத்தொடு போற்றி நின்றாய்
சைவத்தில் உறுதி கொண்டாய்
பவத்தினைப் புரிந்த தென்னோ ?
பாவியேன் கண்கா ணுமல்
புவித்தலம் நீத்துச் சென்றாய்
எந்தையே புகலு வாயே. 1

தாயினை இழந்த நாயேன்
தந்தையுன் இருப்பை உன்னி
மாயிரு ஞாலந் தன்னில்
மகிழ்வுடன் இருந்தேன் அப்பா
நோயினில் வருந்திச் சின்னுள்
நொடியினில் பிரிந்தாய் எம்மை
தீயிடை மெழுகாய் நொந்தேன்
துயரமென் செப்பு வேனே. 2

அறிவிலாப் பருவத் தேநான்
அடங்காத பிள்ளை யானேன் ;
அறிவுற்ற கால மெல்லாம்
பிரிவுற்று நின்றேன் அப்பா
நெறியுற்றுச் சென்றேன் உன்னை
நினைந்திவண் வாழ்ந்து நின்றேன்
மறைவுற்றாய் எந்தாய் எந்நாள்
வையகத் தினிக்காண் பேனே. 3

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு

(27—10—53)

தேனைப் பாலை முக்கனியைத்
　　தெவிட்டா அமுதைச் சிந்திக்கும்
ஊனம் இல்லா உன்கவியை
　　உன்னும் போதென் உள்ளந்தான்
வானோர் நாஞ்சில் நாட்டில் வாழ்
　　வண்மைப் புலவா வையத்துத்
தானேர் இல்லாத் தமிழேபோல்
　　தழைத்து நீடு வாழுதியே.

பாரதியாருக்கு

வறுமைதனை உலகமெலாம் ஒழிக்கச் சொன்னாய்
வளங்களெலாம் ஓங்கவே பெருக்கச் சொன்னாய்
சிறுமைதனை உலகத்தில் ஒழிக்கச் சொன்னாய்
தேவரென மக்களெலாம் வாழச் சொன்னாய்
அறிவதனை உலகத்தில் பெருக்கச் சொன்னாய்
அன்புதனை உலகத்தில் வளர்க்கச் சொன்னாய்
நெறியதனில் சென்றுமே வாழச் சொன்னாய்
நிகரற்ற பாரதியே நின் பேர் வாழி. 1

தமிழ் மொழியை உலகமெலாம் வளர்க்கச் சொன்னாய்
தமிழர் வையத் தலைமைபெற வேண்டும் என்றாய்
சமமாக எல்லோரும் வாழச் சொன்னாய்
சாதிமத நிறப் பேயதனை ஒழிக்கச் சொன்னாய்
குமரி முதல் இமயம் வரை கோயில் கொண்ட
பாரதத்தைக் கும்பிட்டு வாழச் சொன்னாய்
அமுதமெனக் கவிமாரி பொழிந்த வள்ளால்
அற்புதசுப் பிரமணிய நின்பேர்வாழி 2

வாலாஜாபாத் இந்து மத பாடசாலை

1956

பாலாற்றங் கரையிலே வளரும் பள்ளி
பாலர்கள் பலகலைகள் பயிலும் பள்ளி
வாலாஜாபாத் திலே திகழும் பள்ளி
வள்ளலார் இல்லமும் சேர்ந்த பள்ளி
சாலவுமே நல்லதோர் தமிழர் பள்ளி
தமிழகத்தார் ஆர்வமொடு போற்றும் பள்ளி
மேலான கடவுளரின் அருளினாலே
மேன்மேலும் ஓங்கியே வளர்க மாதோ. 1

ஊக்கம் உழைப்பு உயர் நலங்கள்
உருவாய் வந்தோன்
ஒப்பிலா மாசிலா மணி வளர்க்கும்
பாக்கியமாம் இந்து மத பாடசாலை
பாரில் உயர்குரு குலமாய்த் திகழ என்றும்
ஆக்க மெலாம் அருள்புரிக இறைவன் என்றும்
சேக்கிழார் திருநாடு சிறக்க என்றும்
செந்தமிழின் ஓசை யெங்கும் சிறக்க மாதோ. 2

பாரதியாருக்கு

(1922)

சுதந்தர கீதம் சொன்னாய்,
சுதந்தர நாதம் செய்தாய்
சுதந்தரம் மறந்தோ ரெல்லாம்
தொன்மையை நினைக்கச் செய்தாய்
சுதந்தர வானைநாடித் தொல்புவி
நீத்தாய் கொல்லோ?
சுதந்தரப் புலவா எம்மைத்
துரிதமாய்ப் பிரிந்திட்டாயே! 1

அச்சத்தை ஒழிக்கச் சொன்னாய்,
ஆண்மையை வளர்க்கச் சொன்னாய்
இச்சக வாழ்வு பொய்ம்மை,
ஏழைமை, அடிமை வாழ்க்கை
நிச்சலும் ஒழிக்கச் சொன்னாய்
நீணிலாத் தமர வாழ்க்கை
உச்சமா வாழச் சொன்னாய்
உறுதிகள் புகன்றிட் டாயே 2

வையகத் தமர வாழ்க்கை
மாண்புடன் வாழுமாறு
தெய்விகப் புலவர் ஏறே
சிறந்த நற் கவிகள் தந்தாய்
உய்வழி கூறி நின்றாய்
உலகெலாம் போற்ற நின்றாய்
மெய்வழி காட்ட வந்த
வீரநின் நாமம் வாழி 3

நவில் தொறும் உயிர்
அளிக்கும் நலமிகுன் கவிகளாலே
புவிதனில் தலைமை பெற்றுத்
தமிழ்நாடு புதுவாழ் வெய்தும்
கவிகளில் தலைவ நம்தம்
தமிழ் இன்பம் கண்டும் வானோர்
அவியுண வின்பம் காணச்
சென்றனை அழகி தாமே. 4

பாரதியார் பெயர் வாழ்க !

(1960)

பாரதி யென்ருெரு புலவர்—நம்
பழந் தமிழ் நாட்டிலே வாழ்ந்தார்
வீரம் செறிந்த தமிழில்—அவர்
மேலான பாடல்கள் செய்தார். 1

நாடு விடுதலை பெற்றே—மக்கள்
நல்வாழ்வு வாழ்ந்திடு மாறே
ஈடில்லாத தமிழில்—அவர்
எண்ணரும் பாடல்கள் செய்தார். 2

தமிழ் மொழி ஓங்கிட வேண்டும்—இந்தத்
தரணியில் உயர் மொழியான
அமுதில் இனிய தமிழும்—நல்
அரசு புரிந்திட வேண்டும். 3

வறுமையும் சிறுமையும் நீங்கி—நல்
வளங்கள் பெருகிட வேண்டும்
அறிவுடன் அன்பும் பெருகி—நாட்டில்
ஆக்கங்கள் ஓங்கிட வேண்டும். 4

தூக்கமும் சோம்பலும் போக்கி—மக்கள்
துணிவுடன் எல்லோரும் கூடி
உளக்கமாய் வாழ்ந்திட வேண்டும்—என்றே
ஒப்பரும் பாடல்கள் செய்தார். 5

உலகத்தில் வாழும் எல்லோரும்—நல்
உற்ருர்கள் போலவே வாழ்வோம்
கலகங்கள் குழப்பங்கள் வேண்டாம்—என்றே
கவிதைகள் பலபல செய்தார். 6

மனிதர்கள் மட்டுமே யன்றி—இந்த
மண்ணில் வாழ் எல்லா உயிரும்
புனிதராம் கடவுளின் மக்கள்—அவரைப்
போற்றியே அன்புடன் வாழ்வோம். 7

பொய்யும் புலையும் கொலையும்—இந்த
பூமியில் இல்லாது ஒழிப்போம்
தெய்வ நெறியிலே வாழ்வோம்—என்றே
செந்தமிழ்ப் பாடல்கள் செய்தார். 8

தெய்வத்தை நம்பியே வாழ்வோம்—உயர்
செந்தமிழ் நாட்டிலே வந்தோம்
வையத்து உயர்ந்த நம் நாட்டில்—நாம்
வானவ ரென்னவே வாழ்வோம். 9

என்று பலபல பாடல்—நல்
இன்பத் தமிழிலே செய்தார்
வென்றி கொள் வீரக் கவிஞர்—அவர்
மேன்மைத் திருப்பெயர் வாழ்க. 10

வந்தே மாதரம் என்றே—தாயை
வாழ்த்தி வணங்கிடச் செய்தார்
சிந்தைக் கினிய கவிகள்—அவர்
சீர்த்திகள் பாடியே வாழ்வோம். 11

வீரத் தமிழிலே பாடி—நமக்கு
வீரம் உணர்த்திய புலவர்
பாரதியார் பெயர் வாழ்க!—நம்
பாரத தேசமும் வாழ்க! 12

வாழிய திலகன் நாமம்

நாடுரிமை தனையிழந்து அடிமை யுற்று
ஞாலமெலாம் இகழ்ச்சி சொல வீழ்ந்த நாளில்
பீடு பெறத் தாய்நாட்டை உயர்த்து மாறு
பேசரிய உறுதியொடு தோன்றி நின்றான்
கேடிலாப் பெருவீரன் திலகன் என்பான்
கீர்த்தியெங்கும் பரவிய நற்கீர்த்தி யாளன்
பாடுவோம் அவன்புகழைப் பாடி ஆடிப்
பாரதத் தாய் மேன்மை யுறப் பாடுவோமே 1

வேறு

போராடி அன்னியரோ டியம் பரிய
துயரமெலாம் பொறுத்து நின்றோன்
நீராழிக் கப்பாலே மாந்தலையில்
சிறையிருந்தோன் நிகரிலாத
சீரான கீதைக்கோர் விளக்க மருள்
செய்திட்ட சிறந்த ஞானி
பேரான திலகர் பிரான் பிறந்தின்று
நூறாண்டு பிறந்த தம்மா 2

நாட்டிற் குயிரளித்த நல்லோனே நாயகமே
பாட்டிற் குயிரளிக்கும் நின்சீர் பரவிடுவோம்
கேட்டில் உறுதியெனக் கேடில் நலம்புரியுன்
பாட்டை விரித்திடிலெம் பாட்டில் அடங்காதே. 3

மலைகளில் இமய மென்ன மாநதி கங்கை யென்ன
அலைகடல் வையநாட்டில் அழிவிலாப் பரத மென்ன
நிலைபெறும் சுடர்கள் தம்முள் நிகரிலாப் பரிதி யென்னத்
திலகனாய் மக்களுள்ளே சிறந்தனை திலக நீயே. 4

வாழிய திலகன் நாமம் வையம்உள் ளளவும் வாழி!
வாழிய பரத நாடு! வண்டமிழ் வாழி யென்றும்
வாழிய அறங்க ளெல்லாம்! வான்மழை பொழிக நாளும்
வாழிய உலக மெல்லாம்! வாழிமன் னுயிர்கள் மாதோ 5

வாழ்க காமராஜர் !

(அறுபதாண்டு வாழ்த்து)

வாழ்க வாழ்க காமராஜர்
வாழ்க வாழ்க வாழ்கவே
தாழ்விலாத தருமம் ஓங்கித்
தமிழர் நாடு வாழ்கவே. 1

அறுப தாண்டு வாழ்ந்த சீலன்
ஆண்டவன்தன் அருளினுல்
குறைவி லாமல் ஆண்டு நூறு
குவல யத்தில் வாழ்கவே. 2

தமிழர் ஆட்சி ஓங்கி இந்தத்
தரணி யெல்லாம் வாழ்கவே
அமிழ்தில் இனிய தமிழும் இந்த
அவனி யெல்லாம் ஓங்கவே. 3

வறுமை நீங்கிச் சிறுமை நீங்கி
வளங்கள் எங்கும் ஓங்கவே.
அறிவிலாத போராட்டங்கள்
அழிந்து வையம் ஓங்கவே. 4

அன்பும் அறமும் ஓங்கி மக்கள்
அமரர் என்ன வாழ்கவே
இன்ப வடிவ மான ஈசன்
கருணை யென்றும் ஓங்கவே. 5

பகவதிக்கு

1932

எண்ணிரண் டாண்டு வாழ்ந்தாய்
எண்ணருந் துன்பம் உற்ருய்
கண்ணிரண் டிழந்தோ மென்னக்
கலங்கினேம் கண்டமாலைப்
புண்ணுயிர் உண்ணுமென்னப்
புந்தியில் நினைந்தோமல்லேம்
நண்ணிஞய் கொல்லோ கண்ணே
சிவனடி நண்ணி ஞயோ ? 1

நீடு வாழ்ந் திருப்பா யென்றும்
நின்மணக் கோலம் கண்டு
பீடுடன் வாழ்வோ மென்றும்
பெரிதும் யான் மகிழ்ந்திருந்தேன்
கூடினை விட்டு நீதான்
பறந்திடல் குறித்திலேஞல்
வாடிடும் தந்தை தாயர்
வருத்தமென் புகல்வேன் அம்மா. 2

நாட்டமூன் றுடைய நாதன்
திருவடி நாடிச் சென்ற
பாட்டனை நாடிஞயோ
பகவதிக் கண்ணே சென்ற
தாட்டிகத் தம்பி தன்னைத்
தேடிநீ விரைந்தாய் கொல்லோ
பாட்டியைக் கண்ட துண்டோ
பகருவாய் எங்கட் கம்மா 3

நிகரற்ற காந்தி

(1960)

உலகுக் கோர் புதிய வழி காட்ட வந்தாய்
ஒப்பற்ற மகாத்மநின் நாமம் வாழி
திலகமென வந்தாய் நீ எம்மான் இந்த
தேசமெலாம் உய்யவே செய்திட்டாய் நீ
கலக நெறி விலக்கியே மேல தான
கடவுளர்தம் அருள் நெறியைக் காட்டவந்தாய்
ஐயான உண்மை நெறி காட்டிச் சென்ருய்
நிகரற்ற காந்தி நின்சீர் நீடு வாழி. 1

புலைநெறியும் பொய்நெறியும் கொலைமலிந்த
போர்நெறியும் ஒழித்திந்தப் பூமிதன்னில்
தலையான உண்மைநெறி காட்டவந்தாய்
தரணியிலே புதிய யுகம் தோன்றச் செய்தாய்
நலமலியும் நின்வாழ்வு ஞாலம் உள்ள
நா ளளவும் ஒளிகாட்டி வழியே காட்டும்
அலகிலாச் சீருடைய காந்தி யெம்மான்
அவனியிலே நின்நாமம் நீடு வாழி 2

வறுமையிலும் கொடுமையிலும் ஆழ்ந்து மக்கள்
மாநிலத்தில் அடிமைகளாய் மாளுகின்ற
சிறுமைதனை ஒழித்திடவே தோன்றினுய் நீ
ஜெகம் உள்ள நாளளவும் நின்பேர் வாழும்
நெறியறியா மக்களுக்கு நெறியைக் காட்டி
நீணிலத்தில் நெடிய புகழ் கொண்டாய் எம்மான்
குறைவிலா நிறைவுடைய உலகம் சென்ருய்
குணக்குன்றே நின்பெருமை கூறல் ஆமோ

ஏழை மக்கள் படும் துயரம் துடைக்கு மாறு
எண்ணரிய துயரங்கள் ஏற்ருய் எந்தாய்
கோழைகளை வீரர்களாய்ச் செய்தாய் என்றும்
குணமற்ருேர் குணமிக்கோ ராகச் செய்தாய்
வாழ வைக்கும் விடுதலைப் பேறடையச் செய்தாய்
வையகத்தில் பெருவாழ்வு வாழச் செய்தாய்
வாழிய நின் திருநாமம் வாழி என்றும்
மாநிலத்தில் நல்லறங்கள் வாழி மாதோ 4

அரியணையில் தமிழரசி

(1957)

தமிழரசி அரியணையில் அமர்ந்தாள் இன்று
ஜயபேரி முழக்கியே வாழ்த்தல் செய்வோம்
தமிழர் பன்னாள் செய்த தவம் பலித்த தின்று
தலைமையொடு புதுவாழ்வு பெற்று வாழ்வோம்
அமிழ்தினுமே இனிய மொழி தமிழாம் கண்டீர்
அவனிமொழி அனைத்தினுக்கும் தாயாம் கண்டீர்
அமரர்களும் விரும்பும் மொழி தமிழாம் கண்டீர்
அருந்தமிழைப் பெருந்தமிழாச் செய்வோம் நாமே 1

எல்லோரும் தமிழையே சிந்தை செய்வோம்
எல்லோரும் தமிழையே பேசி வாழ்வோம்
எல்லோரும் தமிழையே படித்துவாழ்வோம்
எல்லோரும் தமிழையே பாடி வாழ்வோம்
எல்லோரும் தமிழிலே இன்பம் காண்போம்
இணையற்ற தமிழ்மொழியை வளர்ப்போம் என்றும்
நல்ல நாள் வந்த தென்று ஆடிப் பாடி
நாநிலத்தில் நல்வாழ்வு வாழ்வோம் நாமே 2

பாட்டுப் படிக்கின்ற பெண்

(3—11—22)

பாட்டுப் படிக்கின்ற பெண்ணே—உன்றன்
பாடலைக் கண்டு மகிழ்ந்தேன்
நாட்டில் உன்னைப்போல பெண்கள்—பத்து
நாற்பதி னாயிரம் வேண்டும்
கேட்டினை எண்ணி அழுவார்—வரும்
கேடுகள் எண்ணி அழுவார்
பாட்டினைப் போல இவ் வாழ்க்கை—என்னும்
பான்மை மறந்திட்டார் மக்கள். 1

பாடல் இவ் வையக வாழ்க்கை—இந்தப்
பான்மை அறிந்திட மாட்டார்
ஆடல் இவ் வையக வாழ்க்கை—இந்த
அறிவினை ஓர்ந்திட மாட்டார்
கூடல் இவ் வையக வாழ்க்கை—இந்தக்
குறிப்பை உணர்ந்திட மாட்டார்
வாடி வருந்தி அழிவார்—இந்த
வையக மாந்தர்கள் என்னே ! 2

அன்பே சிவம் என்று சொன்னார்—அந்த
அன்பை வளர்த்திட மாட்டார்
அறிவே தெய்மென் றூர்கள்—அந்த
அறிவை வளர்த்திட மாட்டார்
முன்பிருந் தோர்கள் உரைத்த—நல்
மூதுரை தன்னை மறந்தார்
துன்பத்தில் வீழ்ந்திங் குழல்வார்—அவர்
துயரத்தில் வீழ்ந்து மடிவார். 3

அன்பை வளர்த்திட வேண்டும்—நல்
அறிவை வளர்த்திட வேண்டும்
துன்பமெல்லாம் மாய்ந்துபோகும்—இங்கு
துயரமெல்லாம் ஓய்ந்துபோகும்
இன்பம் மலிந்து நிலவும்—அந்த
ஈசன் திருவரு ளாலே
மன்பதை உய்வழி கண்டோம்—அடி
வாழி அடி தோழி வாழி. 4



ராட்டுப் பாட்டு

நாட்டிற்கு விடுதலையளித்திடும் ராட்டு—நம்
நாரியர் பெருமைகள் காத்திடும் ராட்டு
வீட்டினில் இன்பம் வளர்த்திடும் ராட்டு—நம்
மெய்த்தவன் காந்தி சொல்மேன்மைசேர் ராட்டு 1

அடிமைத்தனத்தை ஒழித்திடும் ராட்டு—நல்
ஆண்மையை என்றும் வளர்த்திடும் ராட்டு
மிடிமையும் நோயும் ஒழித்திடும் ராட்டு—நம்
மேன்மைகள் மீட்டும் அளித்திடும் ராட்டு. 2

பஞ்சமும் நோயும் ஒழித்திடும் ராட்டு—நம்
பாரத நாட்டை உயர்த்திடும் ராட்டு
சஞ்சலம் யாவையும் போக்கிடும் ராட்டு—உப
சாந்தி நிலவிடச் செய்திடும் ராட்டு. 3

கல்வியை மீட்டும் வளர்த்திடும் ராட்டு—நம்
கன்மங்கள் யாவையும் போக்கிடும் ராட்டு
செல்வங்கள் மீட்டும் பெருக்கிடும் ராட்டு—நம்
தெய்விக காந்தி சொல் சீருயர் ராட்டு. 4

சத்தியம் மீட்டும் வளர்த்திடும் ராட்டு—நம்
தர்மங்கள் மீட்டும் வளர்த்திடும் ராட்டு
மித்தைகள் யாவையும் ஒழித்திடும் ராட்டு—நம்
வேந்துயர் காந்தி சொல் மேன்மைசேர் ராட்டு. 5

சிறுமைகள் யாவையும் ஒழித்திடும் ராட்டு—நம்
சீர்த்திகள் யாவையும் கொணர்ந்திடும் ராட்டு
மறுமையும் இம்மையும் நலந்தரும் ராட்டு—நம்
மாதவன் காந்தி சொல் மாண்புயர் ராட்டு. 6

பாபங்கள் யாவையும் போக்கிடும் ராட்டு—நற்
பண்புகள் யாவையும் வளர்த்திடும் ராட்டு
கோபங்கள் யாவையும் ஒழித்திடும் ராட்டு—நம்
குணமுயர் காந்தி சொல் குணமுயர் ராட்டு. 7

துன்பங்கள் யாவையும் போக்கிடும் ராட்டு—ஸ்ரீ
சுதர்சனம் என்றிடக் கூடிய ராட்டு
இன்பங்கள் யாவையும் கொணர்ந்திடும் ராட்டு—நம்
இந்திய நாட்டினை உயர்த்திடும் ராட்டு. 8

ஏழைகள் இல்லையென்றாக்கிடும் ராட்டு—நம்
இந்தியர்க்கென்றும் நலந்தரும் ராட்டு
தாழ்வுகள் அனைத்தையும் போக்கிடும் ராட்டு—நம்
தாசத் தனத்தை ஒழித்திடும் ராட்டு. 9

வீட்டினைத் தெய்விகமாக்கிடும் ராட்டு—நம்
வேத நற் காலத்தை அழைத்திடும் ராட்டு
நாட்டிலும் வீட்டிலும் துன்பங்கள் போக்கி—இந்த
ஞாலமெல்லாம் இன்ப மாக்கிடும் ராட்டு. 10

தீபாவளி

1960

புண்ணியநன் னீராடிப் புதி துடுத்திப்
புதியனவாம் சிற்றுண்டி பல அருந்தி
அண்ணலாம் புயல்வண்ணன் அடிகள் போற்றி
அமர்ந்திடுவீர் நண்பர்களே அந்த நாளில்
மண்ணுளோர் மிகவருந்தச் செய்த பாவி
வல்லரக்கன் நரன் என்னும் அசுரன் தன்னைப்
பெண்ணரசி துணைகொண்டு அழித்திட்டானல்
பெருமானும் பேரவனி பிழைத்த தம்மா 1

இன்றுநர கன்என்ருேர் அசுரன் இல்லை
எண்ணற்ற அசுரர் நம்மை வருத்து கின்ருர்
கொன்றிடும்தீ வறுமையெனும் அசுர ளுேடு
கூடுருேஞ நோய்களெனும் அசுரர் பல்லோர்
வன்றி றல்சேர் அறியாமை அசுரன் தானும்
வையகத்தைப் பலவழியில் வருத்து கின்ருர்
இன்றேயே அவரையெலாம் அழிக்கு மாறு
எம்பெருமான் திருவருளை வேண்டி நிற்போம் 2

கலிஒழிந்து புதுவாழ்வு தோன்ற வேண்டும்
காசினியில் உண்மையே நிலவ வேண்டும்
நலிவுற்ற மக்களெலாம் வன்மை பெற்று
நாட்டிலே மேலோங்கி வாழ வேண்டும்
பலகலையும் பைந்தமிழும் ஓங்க வேண்டும்
பாரிலே அன்புநெறி ஓங்க வேண்டும்
நலமலிய மழைபொழிய வேண்டும் என்றும்
நாதனுர் அருளைமிக வேண்டு வோமே 3

பாரத நாட்டு விடுதலை வீரர்

1958

அந்நாளில் விடுதலைப்போர் தொடுத்த வீரர்
அனைவரையும் சிந்தித்து வந்திப்போம் நாம்
பன்னாளாய் மறந்திருந்தோம் விழித்தோம் இன்று
பாரதமா வீரர் புகழ்பாடி வாழ்வோம்
தென்னாட்டு மன்னனவன் கட்ட பொம்மன்
ஜெகவீர பாண்டிய னார் நாமம் வாழி
அன்னையவள் ஜான்சி மகாராணி வீர
லக்ஷ்மி பாய் அருஞ்செயல்கள் சிந்திப்போமே !

தில்லி மன்னர் மன்னர் பிரான் தேசம் போற்றும்
பகதூர் ஷா திருநாமம் வாழியென்றும்
சொல்லரிய திலகர் பிரான் லஜபத்ராயர்
அரவிந்தர், சிதம்பரனார், சுப்ரமண்யர்
எல்லையிலாச் சீருடைய பெருமான் எங்கள்
இணையிலாக் காந்தி மகான் நாமம் வாழி
நல்வாழ்வு பெற்றுலகில் நாட்டார் ஓங்க
நாளுமே இறைவனை நாம் நாடுவோமே 2

இன்று றுதி கொள்வோம் நாம் எங்கள் நாட்டை
இணையற்ற திருநாடாய்ச் செய்வோம் என்றும்
குன்ருது நலங்களெல்லாம் ஓங்கச் செய்வோம்
குறைவற்ற நிறைவாழ்வு நிலவச் செய்வோம்
வென்றி தரும் தமிழ் மொழியை ஓங்கச் செய்வோம்
விரிந்த பே ருலக மெலாம் ஒன்ருச் செய்வோம்
மன்ருடும் திருவடியை வணங்கி வாழ்வோம்
வாழிய பாரத மென்று வாழ்த்து வோமே. 3

வறுமையென்ப துலகத்தில் இலதாச் செய்வோம்
வளங்களெலாம் ஓங்கியே பெருகச் செய்வோம்
சிறுமையென்ப துலகத்தில் இலதாச் செய்வோம்
தேவரென மக்களெலாம் வாழச் செய்வோம்
அறிவுலகில் ஓங்கியே வளரச் செய்வோம்
அன்புலகில் ஓங்கியே நிலவச் செய்வோம்
இறைவன் அருள் நாடியே வாழ்வோம் என்றும்
இணையற்ற புதுவாழ்வு வாழ்வோம் நாமே. 4

காற்றில்லாமல் கூற்றுவனுக்கு இரையான மாப்பிள்ளைச் சகோதரர்களுக்கு

(4—12—21)

காற்றில்லாமல் உயிர்துறந்தீர்
கண்ணேயனைய துணைவர்களே !
சோற்றில்லாமல் உயிர்துறப்பார்
சுகமில்லாமல் உயிர்துறப்பார்
காற்றில்லாமல் துடிதுடித்துக்
காலனார்க்கிங் கிரையான
கூற்றை என்ன கூறிடுவேன்
கொடுமை! கொடுமை !! கொடுமையரோ !! 1

எல்லையற்ற புவனங்கள் அமைத்துவைத்த
எம்பெருமான்
எல்லையற்ற காற்றினையும் இயற்றி வைத்துக்
காக்கின்றான்
தொல்லையற்ற சுதந்திரத்தை
இழந்ததாலித் தொல்லுலகில்
நல்ல காற் றொன்றோ இழந்தோம் !
நலங்கள் அனைத்தும் இழந்தோமால். 2

கல்லும் புல்லும் பறவைகளும்
காட்டில் வாழும் விலங்குகளும்
நல்ல காற்றை நுகர்ந்திடும் இந்
நாட்டில் நமக்குக் காற்றில்லை
பொல்லா மனிதர் உலகத்தில்
புதுமை இன்று கண்டிட்டோம்
அல்லா ! அல்லா ! நீ இன்னும்
அன்பு கூற மாட்டாயோ ? 3

அடிமை வாழ்க்கை அடைந்திட்டோம்
    அல்லல் அனைத்தும் அடைந்திட்டோம்
படி மீதிந்தத் துயர் வாழ்க்கை
    ஒழிக்க வம்மின் பாரதர்காள் !
கொடி தாம் துயரம் எதனிலுமே
    அடிமைத் துயரம் கொடிதாமால்
முடியும் கொடுமை அனைத்தையுமே
    முதல்வன் நமக்குத் துணையாமே. 4

இவ்வுலகை நல்லுலகாய்ச் செய்வோம்

(1956)

பல்லாண்டு போராடி உரிமை பெற்றேம்
 பாரதத்தாய்! மேன்மைபெற உழைப்போம் என்றும்
எல்லோரும் நல்வாழ்வு வாழச் செய்வோம்
 இல்லையென்ற கொடுமை வையத் திலதாச் செய் [வோம்
பொல்லாத புலை கொலைகள் போராட்டங்கள்
 பூமியிலே இல்லாமல் செய்வோம் இன்றே
எல்லாம் வல் ஈசன் தன் அருளைப் பாடி
 இவ்வுலகை நல்லுலகாய்ச் செய்வோம் நாமே! 1

அன்போங்க அறிவோங்க அறங்கள் ஓங்க
 அவனியெலாம் கிருதயுக நலங்கள் ஓங்க
துன்பங்கள் துயரங்கள் எல்லாம் நீங்கத்
 தூய பெரு நல்வாழ்வு ஓங்கச் செய்வோம்
மன்பதைகள் எல்லோரும் ஓங்கச் செய்வோம்
 வையகத்தில் தமிழ் மொழியை ஓங்கச் செய்வோம்
இன்புருவாம் ஈசன்தன் அருளைப் பாடி
 இவ் வுலகை நல்லுலகாய்ச் செய்வோம் நாமே. 2

ஆடலொடு பாடலும் ஓங்கச் செய்வோம்
 அன்பிலே மக்களெலாம் ஓங்கச் செய்வோம்
நாடெலாம் ஒன்ருகி வையமெல்லாம்
 நலமிக்க தனியரசாய் ஓங்கச் செய்வோம்
நீடு புகழ் காந்தி மகான் புகழைப் பாடி
 நிலையான சத்தியத்தை நிலைக்கச் செய்வோம்;
பாடுவோம் செந்தமிழில் பாடி ஆடி
 பாரதத் தாய் மேன்மையுறப் பரவுவோமே; 3

புது யுகத்தின் கவியரசன்

1958

புதுயுகத்தின் கவியரசே நின்பேர் வாழி
பூமிஉள்ள நாளளவும் நின்பேர் வாழும்
கதியளிக்கும் புதுமைதரும் கவிகள் தந்தாய்
கண்மூடிக் கிடந்த எமை விழிக்கச் செய்தாய்
சதிசெய்யும் பொய்ம்மையெலாம் ஒழியச்செய்தாய்
சத்தியமே நித்திய மென்றுணரச் செய்தாய்.
மதியாத உலகம் எமை மதிக்கச் செய்தாய்
மாகவியே பாரதியே நின்பேர் வாழி 1

பாட்டென்றல் நின்பாட்டே பாட்டதாகும்
பழந்தமிழ்க்குப் புதிய உயிர் அளித்தாய் எம்மான்
நாட்டிலே வறுமையெலாம் ஒழியச் செய்வோம்
நலிவின்றி வளங்களெலாம் பெருகச் செய்வோம்
கேட்டையெலாம் ஒழித்திந்த வையமெல்லாம்
கிளரொளி சேர் புதுவாழ்வு நிலவச் செய்வோம்
மாட்சிபெறும் பாரதியே நின்பேர் வாழி
வளமிக்க நின்கவிகள் வாழ்க மாதோ. 2

நாட்டிலே ஏழையென்போர் கல்வி யில்லார்
நாளுமே ஒருவரின்றி வாழச் செய்வோம்
பாட்டினல் உயிர்அளித்த எம்மான் உன்றன்
பாட்டினல் வையமெலாம் பாலிப்போம் நாம்
காட்டிய நின்நெறியிலே சென்று நாங்கள்
காலனையும் வென்றுலகில் வாழ்வோம் என்றும்
பாட்டினல் பரமனையே பாடி நாளும்
பாரதனில் வீறுடனே வாழ்வோம் நாமே. 3

போர்ஒழித்தும் பகைஒழித்துய் புன்மை ஒன்றும்
பூமியிலே யில்லாமல் ஒழித்து நாங்கள்
சீர் அளிக்கும் தமிழ்த்தாயின் அருளினாலே
தேயமெலாம் பெருவாழ்வு நிலவச் செய்வோம்
மாரியொத்த தமிழ்க்கவிகள் பொழிந்த வள்ளால்
மாகவியே பாரதியே நின்பேர் போற்றி
வீரமிகும் பெருந்தமிழ ராக வாழ்வோம்
மேதினியில் நின்சீர்கள் வாழி மாதோ. 4

வறுமையும் கொடுமையும் இலதாச் செய்வோம்
மடமையும் அடிமையும் இலதாச் செய்வோம்
சிறுமையும் நோயுமே இலதாச் செய்வோம்
தெய்வநெறி எங்குமே நிலவச் செய்வோம்
அறிவு நெறி எங்குமே நிலவச் செய்வோம்
அறிவுநெறி பரவியே வளரச் செய்வோம்
செறியும்வளத் தமிழ்நாட்டுப் புலவோய் எங்கள்
சித்தம் ஒளிர் பாரதியே நின் சீர் வாழி. 5

புதிய ஆண்டு
1960

1

வருகவே புதிய ஆண்டு, மாநிலமெல்லாம் நன்மை
பெருகிடவேண்டும் தீமை பெருகிடா தொழிதல்
வேண்டும்
கருமுகில் பொழியவேண்டும் காடெலாம் விளைய
வேண்டும்
திருவுடன் கல்விஓங்கித் தேசம்முன் னேங்க
வேண்டும்

2

இலையெனும் கொடுமைநீங்கி எல்லோரும் வாழ
வேண்டும்
புலைகொலை போர் ஒழிந்து புதுவாழ்வு நிலவ
வேண்டும்
தலைமையாம் அறமும்அன்பும் தரணியில் ஓங்க
வேண்டும்
நிலவணி ஈசன் எம்மான் நிறையருள் புரிதல்
வேண்டும்

3

பலவளம் பெருகவேண்டும் பைந்தமிழ் ஓங்க
வேண்டும்
நலமலி கலைகள் ஓங்கி நல்லோர்கள் பெருக
வேண்டும்
நிலமிசை பாரதத் தாய் நிகரின்றி நிலவவேண்டும்
நலமிகும் புத்தாண்டுக்கு நல்வரவு இசைப்போம்
நாமே.

குருவிப் பாட்டு

1923

அருவிபோலக் கவிபொழிய—எங்கள்
அன்னை பாதம் பணிவேனே
குருவிப் பாட்டையான் பாடி—அந்தக்
கோதை பாதம் அணிவேனே 1

வினு

சின்னஞ் சிறு குருவீ—நீ
செய்கிற வேலை யென்ன?
வன்னக் குருவி நீ—உலகில்
வாழும் முறைகூருய். 2

குருவியின் விடை

கேளடா மானிடவா—எம்மில்
கீழோர் மேலோர் இல்லை.
மீளா அடிமையில்லை—எல்லோரும்
வேந்தரெனத் திரிவோம். 3

உணவுக் கவலையில்லை—எங்கும்
உணவு கிடைக்குமடா
பணமும் காசும்இல்லை—எங்கு
பார்க்கினும் உணவேடா. 4

சிறியதோர் வயிற்றினுக்காய்—நாங்கள்
ஜென்மமெல்லாம் வீணாய்
மறியலில் இருப்பதுபோல்—பிறர்
வயப்பட்டு உழல்வதில்லை. 5

காற்றும் ஒளியுமிகு—ஆ
காயமே எங்கள்
ஏற்ற மிகுவீடு—இதற்கு
எல்லை யொன் றில்லையடா. 6

வையகம் எங்குமுள—உயர்
வான பொருளெல்லாம்
ஐயமின்றெங்கள் பொருள்—இவையெம்
ஆகாரம் ஆகுமடா. 7

ஏழைகள் யாரும்இல்லை—செல்வம்
ஏறியோர் என்றும் இல்லை
வாழ்வுகள் தாழ்வும் இல்லை—நாங்கள்
மாண்புடன் வாழ்வ மடா. 8

கள்ளம் கபடம் இல்லை—வெறும்
கர்வங்கள் சிறுமை யில்லை
எள்ளற்குரிய குணம்—இவை
யாவும் உம் குலத்தி லடா. 9

களவுகள் கொலைகள் இல்லை—பெருங்
காமுகர் சிறுமை யில்லை
இளைத்தவர்க்கே வலியர்—துன்பம்
இழைத்துமே கொல்லல் இல்லை. 10

சின்னஞ் சிறுகுடிலில்—மிகச்
சீரழி வீடுகளில்—மிக

இன்னலில் வாழ்ந்திடுவீர்—இது
எங்களுக்கில்லையடா. 11

பூநிறை தருக்களிலும்—மிகப்
பொலிவுடைச் சோலையிலும்
தேனிறை மலர்களிலும்—நாங்கள்
திரிந்து விளையாடுவோம். 12

குளத்திலும் ஏரியிலும்—சிறு
குன்றிலும் மலைகளிலும்
புலத்திலும் மாடியிலும்—எப்
பொழுதும் விளையாடுவோம். 13

கட்டுகள் ஒன்றும் இல்லை-பொய்க்
கதைகளும் ஒன்றும் இல்லை
திட்டுகள் கலகங்கள்-முதற்
சிறுமைகள் ஒன்றும் இல்லை. 14

குடும்பக் கவலையில்லை—சிறு
கும்பித் துயரம் இல்லை
இடும்பைகள் ஒன்றும் இல்லை-எமக்கு
இன்பமே யென்றும் அடா. 15

துன்பம் ஒன்றில்லையடா—ஒரு
துயரமும் இல்லையடா
இன்பமே எம் வாழ்க்கை—இதற்கு
ஏற்ற மொன்றில்லை யடா 16

காலையில் எழுந்திடுவோம் பெருங்
கடவுளைப் பாடிடுவோம்
மாலையும் தொழுதிடுவோம்—நாங்கள்
மகிழ்ச்சியில் ஆடிடுவோம். 17

தானே தளைப்பட்டு—மிகச்
சஞ்சலப் படும் மனிதா
நானோர் வார்த்தை சொல்வேன்—நீமெய்
ஞானத்தைக் கைக் கொள்ளடா. 18

விடுதலையைப் பெறடா—நீ
விண்ணவர் நிலைபெறடா
கெடுதலை ஒன்றும் இல்லை—உன்
கீழ்மையை உதறிடடா. 19

இன்பநிலை பெறடா—உன்
இன்னல்கள் தீர்ந்த தடா
துன்பம் இனியில்லை—பெருஞ்
சோதி துணை யடடா, 20

அன்பினைக் கைக்கொள்ளடா—இதை
அவனிக்கிங் கோதிடடா
துன்பம் இனி யில்லை—உன்
துயரம் ஒழிந்த தடா. 21

சத்தியும் கைக் கொளடா—இனிச்
சங்கடம் இல்லையடா
மித்தைகள் தள்ளிடடா...வெறும்
வேடங்கள் தள்ளிடடா. 22

தர்மத்தைக் கைக் கொள்ளடா—இனிச்
சங்கடம் இல்லையடா
கர்மங்கள் ஒன்றும் இல்லை—இதில் உன்
கருத்தினை நாட்டிடடா 23

அச்சத்தை விட்டிடடா ... நல்
ஆண்மையைக் கைக் கொளடா
இச்சகத்தினிலே நீ என்றும்
இன்பமே பெறுவையடா. 24

அழகு

1925

வானத்தை நோக்கிடின் அழகு—இந்த
மாநிலம் எங்கணும் அழகு
கானத்தை நோக்கிடின் அழகு—அந்தக்
கடலினை நோக்கிடின் அழகு
கூனற் பிறையினைத் தழுவும்—அந்தக்
கோபுரம் கோயிலும் அழகு
ஞானத்தை மறந்திட்ட மனிதன்—இந்த
நலங்களை மறந்து வாழ்கின்றான். 1

மலைகளும் நதிகளும் அழகு—அந்த
வாவிகள் சோலைகள் அழகு
நிலவுமிழ் மதியமும் அழகு—அந்த
நெடுங்கதிர்ப் பரிதியும் அழகு
மலரென மணியெனத் திகழும்—அந்த
வானத்து மீன்களும் அழகு
புலவர் செய் பாடல்கள் அழகு—அந்தப்
பூவையர் ஆடலும் அழகு. 2

மதலைக் குழந்தைகள் அழகு—அந்த
மானினம் மயிலினம் அழகு
குதலைமொழிக் கிளி அழகு—அந்தக்
குயிலும் குருவியும் அழகு
விதமுறும் மரம் செடி அழகு—அவை
விரும்பித் தரும் பல மலர்களும் அழகு
இதமுறப் படைத்திவை அளிப்பான்
அந்த ஈசன் திருவருள் வாழி. 3

தெளிவு

2313

ஆனந்த மாகடல் சேர்ந்தேன் —இங்கு
அனைத்திலும் நானுள தன்மை உணர்ந்தேன்
ஈனந்தனையெலாம் விட்டேன்-உயர்
இன்பக் கடலிலே மூழ்கித்திளைத்தேன். 1

எல்லாம் சிவமென்று கண்டேன்-இங்கு
இலகுயிர் அனைத்திலும் எனையன்றிக் காணேன்
பொல்லாத மாயையும் விண்டேன்-இந்தப்
புழுமலக் கூடும் நான் அன்றெனல் கண்டேன். 2

புல்லும் பூண்டும் நான் என்றேன்-அந்தப்
புதிய சுடர் விடு கதிரும் நான் என்றேன்
கல்லும் மணலும் நான் என்றேன்-அந்தக்
கதிரவன் மதியவன் ஒளியும் நான் என்றேன். 3

வானகம் மண்ணகம் நானே-அங்கு
வகை வகை யாத் திகழ் உயிர்த் திரள் யானே
தேனக மலர்களும் நானே-அவை
திகழும் நல் வண்ணமும் மணங்களும் நானே. 4

ஆக்கூர் அனந்தாச் சாரியார்

1962

ஆக்கூர் அனந்தாச் சாரியெனும்
அன்பா என்பால் அன்புடையாய்
ஊக்கம் உடையாய் உழைப்புடையாய்
உயர்ந்த குணங்கள் பல உடையாய்
வாக்கும் மனமும் எட்டாதான்
மாதேவன் தன் திரு அருளால்
நீக்கமில்லா நலங்களெலாம்
நிறைந்து வாழ்க பல்லாண்டே.

வானத்தை நோக்குவோம்

1961

வானத்தை நோக்கிடுவோம்-நாம்
மனம் மகிழ்ந்திடுவோம்
சீனத்து வித்தையெலாம்-அங்கே
திகழ்வதைக் கண்டிடுவோம். 1

சந்திரனைப் பார்த்திடுவோம் நாம்
சந்தோஷம் கொண்டிடுவோம்
விந்தை மதி தனைப் படைத்த-அந்த
மேலோனை வாழ்த்திடுவோம். 2

சூரியனைப் பார்த்திடுவோம்-அவனைத்
தொழுது வணங்கிடுவோம்
பாரினுக் குயிர் அளிக்கும்-அந்தப்
பரிதியை வாழ்த்திடுவோம். 3

நட்சத்திரங்கள் காண்போம்-அவை
நாலா யிரம் கோடி
இச்சையில் படைத்திட்ட-அந்த
ஈசனை வாழ்த்திடுவோம். 4

காலையில் எழுந்திடுவோம்-அந்தக்
கடவுளை வாழ்த்திடுவோம்
மாலையும் தொழுதிடுவோம்-நல்
வாழ்வு சிறந்திடுவோம் 5

அன்பு வாழ்க்கை

(1963)

எண்ணிறந்த எண்ணிறந்த உலகம் உண்டு
இப்போதிவ் வுலகத்தில் வந்துள்ளோமால்
பண்ணிறைந்த பாடலால் வேண்டுகின்றேன்
பாரீர் நீர் அன்பு செய்திங் கின்பில் வாழ்வீர்
மண்ணகத்தில் மறமின்றி அறமே செய்து
வானகத்துப் பெருவாழ்வு வாழ்வோம் இங்கே
அண்ணலையே எந்நாளும் போற்றி வாழ்வோம்
அமரரென இவ்வுலகில் வாழ்வோம் நாமே. 1

சக்தியை வேண்டல்

1925

...ECTOR OF ARCHAEOLOGY
4786
4 JUN 1975

சக்தி தாராய்-பராசக்தீ
சக்தி தாராய்
பக்தி செய்வேன்—உனையே-என்றும்
பக்தி செய்வேன்

அதர்மத்தை ஒழிக்க வேண்டும்-புவியில்
அசத்யத்தை ஒழிக்கவேண்டும்.
சுதர்மத்தை வளர்க்கவேண்டும்-நம்
தொன்மையை வளர்க்க வேண்டும். 1

அறியாமை ஒழிக்கவேண்டும்-புவியில்
அநியாயம் ஒழிக்க வேண்டும்
நெறியான நெறியில் நின்று-இந்த
நீணிலத் துயர வேண்டும் 2

வறுமையை ஒழிக்கவேண்டும்-பெரு
வாழ்வுற உழைக்க வேண்டும்
சிறுமைகள் ஒழிக்கவேண்டும்-என்றும்
செம்மையே புரிதல் வேண்டும் 3

துன்பங்கள் ஒழித்தல் வேண்டும்-புவித்
துயரங்கள் ஒழித்தல் வேண்டும்
இன்பங்கள் ஆக்கல் வேண்டும்-உனை நான்
ஏத்தியே தொழுதல் வேண்டும் 4

நாட்டினைக் காக்க வேண்டும்-பல
நன்மைகள் ஆக்கவேண்டும்
கேட்டினை ஒழிக்கவேண்டும்-என்றும்
கேடில் சீர் ஆக்கவேண்டும்

புவியினைக் காக்கவேண்டும்–பல
புதுமைகள் ஆக்கவேண்டும்
கவியினைப் போல வாழ்வில்–இன்பம்
கலந்திடச் செய்தல் வேண்டும் 6

அறநெறி வளர்க்க வேண்டும்–என்றும்
அன்பினை வளர்க்க வேண்டும்
மறநெறி ஒழிக்கவேண்டும்–புவியில்
மன்பதை உய்யவேண்டும் 7

ஞானத்தை வளர்க்கவேண்டும்–என்றும்
நன்மையே நிலவவேண்டும்
மோனத்தில் இருக்கும் தாயே–இவை
முழுதும் நீ அருளல் வேண்டும். 8

உன்னை யான் பாடவேண்டும்–என்றும்
உவகையில் ஆடவேண்டும்
என்னை நான் அறிதல் வேண்டும்–வையம்
இன்பத்தில் நீடவேண்டும். 9

பூவுலகைப் பொன்னுலகாய்ச் செய்வோம்

பூவுலகைப் பொன்னுலகாய்ப்
புதுமை யாக்குவோம்
தேவரென்ன மக்களெல்லாம்
சிறந்து வாழுவோம். 1

எறும்புமுதல் யானைவரை
எல்லா உயிர்களும்
விரும்பும்விதம் சிறந்துவாழ
வினைகள் ஆற்றுவோம் 2

பொய்யொழிந்து புலையொழிந்து
பூமி யெங்கணும்
மெய்சிறந்து இன்பம் மேவ
வினைகள் ஆற்றுவோம். 3

அன்புபெருகி அறம்வளர்ந்து
அவனி யெங்கணும்
இன்பம்மேவி இனிதுவாழ
இறையை வேண்டுவோம் 4

பஞ்சப்பேயை ஒழித்திடுவோம்

(1951)

பஞ்சப் பேயை ஒழித்திடுவோம்
பாரினில் மக்களை உயர்த்திடுவோம்
அஞ்சல் என்றே கடவுளரும்
ஆசிகூறி வாழ்த்திடு வார். 1

நிலங்களெல்லாம் பயிர் செய்வோம்
நீரை யெங்கும் பெருக்கிடுவோம்
கலம் கலமாகவே தானியங்கள்
கைசெய் வினையால் விளைத்திடுவோம். 2

ஏரி குளங்கள் பெருக்கிடுவோம்
எங்கும் கிணறுகள் வெட்டிடுவோம்
வாரி பெருக்கி நாடெங்கும்
வளங்கள் பெருகச் செய்திடுவோம். 3

நெல்லும் கரும்பும் பயிர்செய்வோம்
நிலத்தில் மஞ்சள் பயிர்செய்வோம்
புல்லும் உணவாம் மாட்டுக்குப்
பூமி யெங்கும் பயிர்செய்வோம். 4

மாவும் பலாவும் வளர்த்திடுவோம்
வாழை தென்னை வளர்த்திடுவோம்
பூமி யெங்கும் மரம் வளர்த்துப்
புதுமையாகச் செய்திடுவோம். 5

பசுக்கள் ஓங்கச் செய்திடுவோம்
பாலும் தேனும் பெருக்கிடுவோம்
சிசுக்கள் ஓங்கச் செய்திடுவோம்
தேசம் ஓங்கச் செய்திடுவோம். 6

சோறும் துணியும் இல்லையெனும்
சொல்லைப் பொய்யாச் செய்திடுவோம்
பாரே திரண்டு வந்தாலும்
பசிதீர்த் துதவி செய்திடுவோம். 7

ஏழைகள் செல்வர் எனும்பிரிவு
இல்லையாகச் செய்திடுவோம்
வாழும் மக்கள் எல்லோரும்
மன்னரென்ன வாழ்ந்திடுவோம். 8

இருக்க வீடு உடுக்க உடை
இன்ப வாழ்விங் கெல்லோர்க்கும்
பெருக்க மாகச் செய்திடுவோம்
பெரு வாழ்வுலகில் வாழ்ந்திடுவோம். 9

பொய்யும் புலையும் கொலையும்மே
பூமியில் ஒழியச் செய்திடுவோம்
மெய்யே பெருகி நாடெல்லாம்
விண் ணுடாகச் செய்திடுவோம். 10

அன்பைப் பெருக்கி வையமெலாம்
அமரர் உலகாய்ச் செய்திடுவோம்
இன்பம் பெருகச் செய்திடுவோம்
ஈசன் நமக்குத் துணையாமே. 11

வயிறு நிரம்பிடவேண்டும்

வயிறு நிரம்பிடவேண்டும்—இங்கு
வாழ்ந்திடும் மக்களுக் கெல்லாம்

வயிறு நிரம்பிய தென்றல்—மக்கள்
வாழ்வு நிரம்பிய தாகும்

சிறுமைக் குணங்கள் ஒழியும்—உயர்
சிறந்த குணங்கள் மலியும்

பொய்யும் புலையும் கொலையும்—இந்தப்
பூமியில் இல்லாமல் ஒழியும்

அன்பும் அறமும் மலியும்-நல்
அறிவுமிகச் சிறந் தோங்கும்

துன்பமும் துயரமும் இன்றி-இங்கு
தூய நல் இன்பங்கள் ஓங்கும்

தெய்வத் தமிழ்த் திருநாட்டீர்—இந்த
ஜெகத்தினுக்குத் தலைவர் நீரே

உய்யும் வழியினைக் காண்பீர்—இந்த
உலகத்தை ஓங்கிடச் செய்வீர்

ஐயன் அருள் புரிந்திடுவான்—அவன்
ஆடும் மலர்ப் பதம் வாழி.

வாழ்க மரங்கள் செடி கொடி வாழ்க

மரம் செடி கொடியால் மண்ணினில் வாழ்வு
மனிதர்கள் இதனை உணர்வது அறிவு
அறஞ்செயல் நல்ல மரம் செடிவளர்ப்பு
அனைவரும் இதனை உணர்வது சிறப்பு. 1

உடுத்தும் ஆடை தருவது எதுவோ
உண்ணும் உணவுகள் தருவது எதுவோ
படுக்கும் பாய்கள் தருவது எதுவோ
பலவகை மரங்கள் செடிகொடி அன்றோ ? 2

சோறும் துணியும் தருவது எதுவோ
சுகவாழ் வுலகில் தருவது எதுவோ
மாறில் லாமல் காப்பது எதுவோ
மரங்கள் செடிகள் கொடிகள் அன்றோ. 3

அரிசியும் பருப்பும் தருவது எதுவோ
அறுசுவை உண்டி அளிப்பது எதுவோ
தரணியில் வாழ உதவுவது எதுவோ
தருக்களும் செடிகளும் கொடிகளும் அன்றோ. 4

மாங்காய் தேங்காய் கொடுப்பது எதுவோ
மதுரக் கனிகள் கொடுப்பது எதுவோ
நீங்காது நம்மைக் காப்பது எதுவோ
நிழல்தரு மரங்கள் செடி கொடி அன்றோ. 5

எண்ணெயும் வித்தும் தருவது எதுவோ
எரியும் வெளிச்சமும் தருவது எதுவோ
மண்ணில் வாழ உதவது எதுவோ
மரங்கள் செடிகள் கொடிகள் அன்றோ. 6

விருந்தும் மருந்தும் தருவது எதுவோ
வேண்டுவ தெல்லாம் தருவது எதுவோ
அருந்தும் பானங்கள் தருவது எதுவோ
அரிய மரங்கள் செடி கொடி அன்றோ. 7

கப்பலும் படகும் தருவது எதுவோ
கட்டிலும் மேசையும் தருவது எதுவோ
பற்பல வகையில் உதவுவது எதுவோ
பலவகை மரங்கள் செடி கொடி அன்றோ. 8

பலவகை மலர்கள் தருவது எதுவோ
பண்புடை மணங்கள் தருவது எதுவோ
நிலமகள் தனது அழகணி போல
நிலவிடும் மரங்கள் செடி கொடி அன்றோ. 9

காற்றும் மழையும் தருவது எதுவோ
காசினி வாழ உதவுவது எதுவோ
போற்றும் பூசைக்கு உதவுவது எதுவோ
புண்ணிய மரங்கள் செடிகொடி அன்றோ. 10

வாழ்க மரங்கள் செடி கொடி வாழ்க
வானம் பொழிந்து மாநிலம் வாழ்க
தாழ்வில் லாத தருமம் வாழ்க
தானமும் தவமும் தழைத்து வாழ்க. 11

மரம் செடி கொடிகள் வளர்த்திடுவோம்

மரஞ் செடி கொடிகள் வளர்த்திடுவோம்
மக்கள் வாழ்வை வளர்த்திடுவோம்
நிரந்தர மாகக் காத்திடுவோம்
நிறைவாழ்வு உலகில் வாழ்ந்திடுவோம். 1

ஊரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
உயரிய மரங்கள் வளர்த்திடுவோம்
பாரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
பலவகை மரங்கள் வளர்த்திடுவோம். 2

ஆல் அரசு வேம்பு வளர்த்திடுவோம்
அழகிய மரங்கள் வளர்த்திடுவோம்
மேலாம் மரங்கள் வளர்த்திடுவோம்
மேதினி வாழ்வு வளர்த்திடுவோம். 3

மாபலா கொய்யா வளர்த்திடுவோம்
வாழை தென்னை பனை வளர்த்திடுவோம்
பூங்கமுகும் கரும்பும் வளர்த்திடுவோம்
புண்ணிய நெல்லி வளர்த்திடுவோம். 4

பூஞ்செடி கொடிகள் வளர்த்திடுவோம்
பூமியை அழகாச் செய்திடுவோம்
வாஞ்சை யாகக் காத்திடுவோம்
வாழ்வு பெருகச் செய்திடுவோம். 5

சாலையில் மரங்கள் வளர்த்திடுவோம்
தண்ணிழல் மரங்கள் வளர்த்திடுவோம்
சோலையும் குளமும் பெருக்கிடுவோம்
சுகவாழ்வு நிலவிடச் செய்திடுவோம் 6

ஏரி குளங்கள் பெருக்கிடுவோம்
எங்கும் சோலைகள் வளர்த்திடுவோம்
மாரி நீரை வீணுக் காமல்
வற்ருக் குளங்கள் ஆக்கிடுவோம். 7

காடும் வனமும் பெருக்கிடுவோம்
கார் மிகப் பொழியச் செய்திடுவோம்
நாடு செழிக்கச் செய்திடுவோம்
நாதனைத் தொழுது வாழ்த்திடுவோம். 8

ஜெயக்கொடி

(1962)

சீனத்து வீணரை ஓட்டி—நாம்
ஜெயக்கொடி நாட்டியே வாழ்வோம்
வானத்துத் தேவர்களெல்லாம்... நமக்கு
வழித்துணை யாகவே வந்தார். 1

தேவர்கள் வாழ் உயர் மலையில்—இன்று
தீயவர் வந்து புகுந்தார்
பாவியரை விரைந்தோட்டி—நம்
பாரதம் ஓங்கிடச் செய்வோம். 2

சத்தியம் நித்தியமென்ற—உயர்
தருமத்தை மறந்திங்கு வந்தார்
சுத்த மூடர்கள் தம்மை—நாம்
துரத்தி அடித்துமே வாழ்வோம். 3

புத்தர் பிறந்த நம் நாட்டில்—தீய
புத்தர்கள் வந்து புகுந்தார்
எத்தனை துன்பம் வந்தாலும்—நாம்
இவரைத் துரத்தியே வாழ்வோம். 4

நாற்பது கோடி நாம் வாழ்வோம்—இங்கு
நல்ல வழியிலே செல்வோம்
வேற்படை வீரன் நம் முருகன்-நமக்கு
வெற்றி அளிப்பது திண்ணம். 5

ஏழைகள் துயரம்

(1959)

சாண் வயிற்றுக்காக—அவர்
சதா வருந்தி வாழ்வார்
ஆண்மை யுள்ள மக்காள்—இந்த
அவலம் நீக்க வாரீர்
வாணு ளெல்லாம் இங்கே—அவர்
வருந்தி வருந்தி மாள்வார்
காணும் கண்ணிங் குடையீர்—இந்தக்
கவலே நீக்க வாரீர். 1

கால் வயிற்றுக்காக—அவர்
கால மெல்லாம் உழைப்பார்
நாலும் இரண்டும் அறியார்—இந்த
நாட்டு மக்கள் பல்லோர்
ஞால மீதில் என்றும்—அவர்
நலிந்து வருந்தி வாழ்வார்
மேலதான வாழ்வை—அவர்
மேவி வாழ்தல் என்ருே? 2

வேறு

வறுமையை ஒழித்து வாழ்வீர்
வளங்களைப் பெருக்கி வாழ்வீர்
சிறுமையை ஒழித்து வாழ்வீர்
செம்மையே பெருகச் செய்வீர்
அறிவினை வளர்த்து வாழ்வீர்
அன்பினை வளர்த்து வாழ்வீர்
இறைவனைத் தொழுது வாழ்வீர்
இன்பத்தில் வாழுவீரே. 3

ஆண்ட்ரூஸ் முனிவருக்கு

உலக நலமே தன்னலமாய்
ஓயா துழைத்த பெருமானே
புலவர் திலகன் ரவீந்த்ரன்
காந்திப் பெரியோன் உளம்போந்து
நிலவி வாழ்ந்த பெருநண்பா
நேர்மை ஆந்த்ரூஸ் முனிவோனே
மலைபோ லிருந்த நீயின்று
மாயமாக மறந்தனையே 1

வேற்று நாட்டில் தோன்றிய நீ
மேலாம் பரத நாடதனை
ஏற்றுத் தாய் நாடாக அதற்
கெண்ணற் கரிய பணிசெய்தாய்
போற்றும் பெரிய தாகூரும்
காந்தியாரும் போற்ற நின்றாய்
கூற்றம் உன்னைப் பிரித்ததுவே
கொடுமை கொடுமை கொடுமை அரோ. 2

ஏசுநாதர் அந்நாளில் இருந்தார்
அவரை நாம் அறியோம
ஏசுநாதர் போலே நீ
இன்று மண்ணில் வாழ்ந்திட்டாய்
நேசத் தொண்டிங் காற்றுவதில் நிகரார்
உனக்கு நீள் உலகில்
வீசு புகழ்ச்சர் ஆந்த்ரூசே
மேலோர் உலகம் மேவினையே. 3

வன்மை உடையோர் கொடுமையினுல்
    வருந்தி உழலும் உலகத்தார்
இன்னல் தீர்க்கும் திருப்பணியே
    என்றும் கொண்டாய் எம்பெருமான்
மன்னும் உலகில் இனி உன்போல்
    மக்கட் குழைப்பார் யார் உளரே
துன்பும் துயரும் இல்லாத
    ஜோதி உலகம் புகுந்தாயே. 4



115

ஓம் எனும் பொருளான்

(1963)

ஓம் எனும் பொருளானை
    உவமையில் பெருமானைத்
தேமொழித் தமிழாலே
    தினந்தொறும் தொழுதிடுவோம்
பூமியில் நாம் விரும்பும்
    பொருள் அனைத்தும் அருள்வான்
சாமி அவன் பாதம்
    சந்ததம் பணிவோமே.

தமிழே உன்னல் வாழ்கின்றேன்

(1961)

தமிழே உன்னல் வாழ்கின்றேன்
　　தமிழே உன்ளுல் வளர்கின்றேன்
அமிழ்தில் இனியாய் தமிழே நீ
　　அனைத்தும் ஆவாய் எனக்கே நீ
பழுதில் உன்தன் அருமையெலாம்
　　அடியேற் குணர்த்திப் பாலிப்பாய்
தமிழே வாழி வாழி யென
　　வாழ்த்தித் தமியேன் வாழ்வேனே.



மங்களமாகப் பொங்கல் பொங்குக

மங்கள மாகப் பொங்கல்
பொங்குக! வளங்கள் பொங்க!
பொங்குக நலங்க ளெல்லாம்
பொங்குக புதுவாழ் வெங்கும்
திங்கள் மும்மாரி பெய்து
தேசத்தில் வாழ்வு பொங்க!
செங்கதிர்த் தேவ ஞரின்
திருவருள் பொங்க மாதோ. 1

மஞ்சளும் கரும்பும் ஓங்க
வாழையும் கமுகும் ஓங்க
செஞ்சாலிப் பயிர்கள் ஓங்க
தென்னை மா பலாவும் ஓங்க
மஞ்சுலாம் சோலை யெங்கும்
மயில்களின் ஆடல் ஓங்க
கஞ்சமா மலரில் ஓங்கும்
அன்னையின் கருணை ஓங்க! 2

அன்பறம் வளர்ந்தே ஓங்க
அலைகடல் உலக மெங்கும்
துன்பங்கள் நீங்கி நல்ல
சுகவாழ்வு பெருகி ஓங்க
இன்பமார் தமிழும் ஓங்க
எங்குமாய் விளங்கி ஓங்கும்
எம்பிரான் அருளும் ஓங்க
ஓங்கவே உலக மெல்லாம். 3

திருவிளக்கேற்றித் தெய்வம் தொழும்

திருவிளக் கேற்றித் தெய்வம் தொழும்—நம்
தேசம் உய்யத் தெய்வம் தொழும்
கருதும் மாலையும் காலையிலும்—நம்
கனக விளக்கைத் தொழுதிடுமே. 1

மங்கலத் தங்க விளக் கேற்றும்—உயர்
மணிவிளக்கு ஒளி செய்யும் கிளைவிளக்கு
துங்கமான சுடர் விளக்கு—நம்
ஜோதி விளக்கைத் தொழுதிடுமே. 2

சிதம்பரனுர் பஞ்சகம்

இதம்பெற நாட்டா ரெல்லாம்
எண்ணரும் தியாகம் செய்தாய்
விதம்பெறும் இன்னல் நீங்கி,
விடுதலே யெய்தி நாட்டார்
பதம்பெறப் பெரிதும் நாடிப்
பல்விதத் துழைத்தல் செய்தாய்
சிதம்பரப் பெரியோய் உன்றன்
சீரிணப் போற்று கின்றேம்! 1

நாட்டினில் வணிகம் ஓங்கி
நல்வாழ்வு பெருகு மாறே
ஓட்டிஞய் நாவாய் அந்நாள்
உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்ருய்
புன்மையோர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் இட்டும்
மனம் தளராது நின்ருய் 2

தமிழ் மொழி ஓங்கி
யென்றும் தரணியில் சிறக்குமாறு
தமிழ்நூல்கள் இயற்றித் தந்தாய்
தமிழ்க்கவி இயற்றித் தந்தாய்
தமிழர்கள் புதுவாழ் வெய்தித்
தரணியில் ஓங்குமாறு
தமிழர்கள் தலேவா நாளும்
தளர்விலா துழைத்தல் செய்தாய் 3

ஊக்கமும் வலியும் குன்றி
ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத்
துயிலெழச் செய்தாய் ஐய,
பாக்கியம் பெருகி நாட்டார்
பாரினில் ஓங்கு மாறு
தூக்கிய வினைகள் செய்தாய்
துணிவுமிக் குடைய கோவே. 4

பொற்சிலை வைத்திங் குன்னைப்
போற்றிட விரும்புகின்றேம்
கற்சிலை வைத்தும் இன்னும்
காண்கிலேம் கலைவலோனே
நற்செயல் பெரிதும் செய்தாய்,
நாட்டினை அகத்திற் கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும்
ஞாலம் உள்ளளவும் வாழி 5

எறும்புக் கிரங்கல்

1913

இளைத்துக் களைத்து இரைதேடும் சிற்றெறும்பே
வளைத்து வளைத்தலைந்து வாடுகிறாய் என் உயிரே. 1

அன்னாளில் என்னவர்கள் அன்னம் உனக்கீந்து
பன்னாள் அறம் புரிந்தார் பண்பே புரிந்தரால். 2

இந்நாளில் என்னவர்கள் என் அருமைச் சிற்றெறும்பே
பன்னாள் உன் உணவும் பறித்தெடுப்பார் பாவியர்கள் 3

உன்னை நினைந்துருகென் உள்ள நிலைமையினை
என்னென்று கூறுவேன் என் அருமைச் சிற்றெறும்பே. 4

வருக துன்முகியே

வருக துன்முகியே உன்றன்
வருகையைப் போற்றுகின்றேம்
திருகல்கள் போக்கி எங்கள்
நாட்டிலே சீர்க ளெல்லாம்
பெருகிட அருள் செய்வாயால்
பெரிய இவ்வைய மெல்லாம்
திருவளர் தமிழ் வளர்ந்து
சிறப்புற அருள்செய் வாயால். 1

அன்புடன் அறமும் மெய்யும்
ஆதிய நலங்க ளெல்லாம்
முன்புபோல் எங்கள் நாட்டில்
நிலவிட முயலுகின்றேம்
துன்பங்களுக்குத் தாயாய்த்
தோன்றிய வறுமைத்தொல்லை
மன்பதைக் கிலதாய்ச் செய்ய
முயலுவோம் வருகின்ருயா ? 2

கல்வியும் தவமும் ஏனைக்
கலைகளும் உலகம் உய்யும்
பல்வித நலமும் நாட்டில்
பல்கிட முயலுகின்றேம்
தொல்லைகள் நீக்க வாரும்
துன்முகீ துணைசெய் வாயா ?
வல்லநின் வரவு நல்ல
வரவென வாழ்த்துவோமே 3

வருகநற் பிலவ ஆண்டே !

1962

வருகநற் பிலவ ஆண்டே
வருகநீ வருக ! வாழ்க !
தருமங்கள் பெருக எங்கும்
சன்மார்க்கம் ஓங்க, தீய
கருமங்கள் ஒழிய, நீண்ட
காசினி யெல்லாம் ஓங்க
பருவநல் மழைகள் பெய்க
பலவளம் சிறக்க மாதோ ! 1

எட்டெனும் கோள்கள் ஒன்ருய்
மகரத்தில் இணைவ தாலே
கட்டங்கள் பெருகு மென்றும்
கவலைகள் ஓங்கு மென்றும்
மட்டிலாத் துன்பம் என்றும்
வானநூல் வல்லார் சொல்வர்
திட்டமாய் அறியேம் ஒன்றும்
தெய்வவே துணை நமக்கே. 2

என்னதான் நேர்ந்திட் டாலும்
இந்தமா நிலத்தில் மேலாம்
பன்னலம் புணரும் எங்கள்
பாரத நாட்டிற் கென்றும்

இன்னல்கள் நேராதென்றும்
இன்பமே பெருகு மென்றும்
சொன்னார்கள் அறிவின் மிக்கோர்
துணை உண்டு இறை நமக்கே.

[பிலவ ஆண்டு கடைசியில் 1962 பிப்ரவரி மாதத்தில் மகர ராசியில் எட்டு கிரகங்கள் ஒன்று சேர்ந்ததால் உலகத்திற்குப் பல துன்பங்கள் நேருமென்று சில சோதிடர்களும், நன்மையே நேருமென்று பல சோதிடர்களும் சொன்னார்கள்.]

பாரதிக்கு

உள்ளம் உருக்கும் கவி அளித்தாய்
　　உலகம் எம்மை மதிக்க வைத்தாய்
பள்ளத் திருந்த குருடரெலாம்
　　பாரில் விழிபெற் றுய்ய வைத்தாய்
தெள்ளு தமிழை வாழ வைத்தாய்
　　தேசம் போற்றும் கவிஅரசே
வள்ள லேஉன் திருநாமம்
　　வாழ்க வென்று வாழ்த்துவமே.

புத்துயிர்ப் பத்து

1920

இன்பம் உலக மென்று பாடுவோம்—இனித்
துன்பங்கள் இல்லையென்று சாடுவோம்
அன்பு பெரிதென்று கூடுவோம்-இனி
ஆனந்த வாரிதியில் ஆடுமோம். 1

கள்ளம் கபட மொன்றும் செய்யோம்—நல்ல
கடவுள் வழியில் நின்றிங் குய்வோம்
வெள்ள மெனப் பொழியும் என்றும்-இன்ப
வேலையினில் ஆடியறம் செய்வோம். 2

அசத்தியம் அனைத்தையும் அழிப்போம்-இங்கு
அதர்மங்கள் அனைத்தையும் ஒழிப்போம்
நிசத்தையே என்றுமினி வளர்ப்போம்-இனி
நீதியை என்றுமிவண் வளர்ப்போம். 3

சோம்பலைத் தூரத்தில் ஒழிப்போம்—இனிச்
சுறுசுறுப் பொன்றையே வளர்ப்போம்.
தேம்பிப் புலம்பியிங்கு மாளோம்—இனித்
தீரச் செயல்கள் செய்து வாழ்வோம். 4

வீரத்தை என்றுமிவண் வளர்ப்போம்-இனி
மெலிவுகள் அனைத்தையும் ஒழிப்போம்.
தீரத்தில் பார்த்தனை நிகர்ப்போம்—அறச்
செயலினில் கர்ணனை நிகர்ப்போம். 5

கோழைத்தனத்தையினிக்கொல்வோம்-நல்ல
குணங்கள் அனைத்தையுமே கொள்வோம்.
வாழத் தகும் குணங்கள் கண்டோம்—இனி
வையகத்தில் தேவரென வாழ்வோம். 6

சிறுமைக்குணங்கள் தமை ஒழிப்போம்-இனிச்
சிறந்த குணங்கள் தமை வளர்ப்போம்.
வறுமை, சிறுமைகளைத்தொலைப்போம்-இனி
வானவ ரென்ன இவண் சிறப்போம். 7

தேவர் குணங்களினைக் கொள்வோம்-இனித்
தெய்வங்க ளென்ன இவண் வாழ்வோம்.
மூவரும் யாவரும் போற்ற—இந்த
மூதுலகந் தன்னில்இனி வாழ்வோம். 8

அன்பினை உலகத்தில் வளர்ப்போம்—இது
ஆனந்த மார்க்கமெனல் கண்டோம்.
துன்பங்கள் அனைத்தையும் போக்கும்-இந்தத்
தூயநன் மருந்தைக் கைக்கொண்டோம். 9

புத்துயிர் பெற்றுலகில் வாழ்வோம்—இனிப்
புதிய தமிழரென வாழ்வோம்.
மித்தைகள் அனைத்தையும் தள்ளி—இனி
மெய்யைக் கடைப்பிடித்து வாழ்வோம். 10

நிலவு

(1915)

பாலை யெங்கனும் கொட்டிய தென்னப்
பரிதியை வடி கட்டிய தென்னச்
சீலமான நல் வெள்ளி உருக்கித்
திரு இலங்கப் பரப்பிய தென்னக்
கோல மாதர்கள் மைந்தர்கள் உளமும்
கோதிலா உயிர் யாவும் இன் பெய்த
நீல வானத்தில் தோன்றிய தண்ணென்
நிலவின் தோற்றமிங் கென்னென்று சொல்வேன்! 1

ஒளி மிகுந்த இவ் விரவில் எழுந்தேன்
உம்பர் வானத் தமுதெனக் கண்டேன்
களிமிகுந்த இந் நிலவினற் காட்சி
காண்டொறும் உளம் கசிந்திடும் அம்மா
அளிமிகுந்த இம் முழுமதி தானும்
அமுதையோ யிவண் நிலவெனக் கொட்டும்
துளிகொள் நீர் சடைக் கடவுளர் முடிசேர்
சோதி வெண்மதித் தண்மையென் சொல்வேன்? 2

துன்ப மார்ந்ததிவ் வையகம் என்பார்
சோதி வானவன் நீதிகள் காணார்
இன்ப மார்ந்ததிவ் வையகம் அம்மா
ஏதிலார் சொலும் புன்மை யென் சொல்வேன்
புன் புலால் உடல் நிலையெனக் கொள்ளார்
பூவில் நீரெனப் பூவினில் வாழ்வார்
அன்பும் உண்மையும் தருமமும் கொண்டார்
அடைவ தென்றும் நல் இன்பமே யன்றோ? 3

செந்தமிழ் நாடு

(1923)

செந்தமிழ் நாடெங்கள் நாடே—உயர்
தேவரும் போற்றுபொன் ளுடே
வந்தனை புரிவம் எப்போதும்—இது
வானிலும் மாண்புயர் நாடு. 1

கம்பனும் பாரியும் வாழ்ந்த—எங்கள்
காதற் பெருந் திரு நாடு
இம்பரெல் லாம்புகழ்ந் தேத்தும்—உயர்
வெய்திய வள்ளுவர் நாடு. 2

மூவர்கள் ஆண்ட பொன்ளுடு—எங்கள்
முதல்வன் அருள் பொங்கும் நாடு
தேவரும் யாவரும் போற்றும்—எங்கள்
செந்தமிழ் நாடுயர் நாடு. 3

நால்வர்கள் பாடிய நாடு—பெரு
நாவலர் பாவலர் நாடு
மாலவன் மீதுமால் கொண்ட—உயர்
மாதவர் எண்ணிலர் நாடு, 4

மநு நீதி சோழன் நன்ளுடு—உயர்
மாண் பொற்கைப் பாண்டியன் நாடு
அநுதினம் இறைவனை ஏத்தி—உல
காண்டநன் மங்கையர் நாடு. 5

ஆண்டவன் ஆண்ட பொன்ளுடு—எங்கள்
அருளுடைப் பாண்டியன் நாடு

நீண்டசீர்ச் சோழன் நன்னாடு—என்றும்
நிலவிசைச் சேரன் நன்னாடு. 6

கொடையில் சிறந்தநற் பாரி—உயர்
குமணன் முதற் பலர் நாடு
நடையில் சிறந்த நல்லோர்கள்—உயர்
ஞானியர் வீரர்கள் நாடு. 7

கற்புடைக் கண்ணகி நாடு—எம்
கண்மணி ஆண்டாளின் நாடு
பொற்புடைக் கன்னியர் நாடு—எம்
புண்ணியத் தாய்த் தமிழ் நாடு. 8

அருவி சிறந்த நன் னாடு—உயர்
ஆலயம் மிகுந்த பொன்னாடு
திருமிகு புலவர்கள் என்றும்—எங்கள்
தேவனைப் போற்றிடும் நாடு. 9

காவிரி சீர் மிகு நாடு—உயர்
கடவுளர் வைகை நன்னாடு
பூவிரி பொருனைநன் னாடு—எம்
புண்ணியத் தென் பெண்ணை நாடு. 10

முத்தமிழ் நாடுயர் நாடு—எங்கள்
முருகன் திருப் புகழ் நாடு
சித்தரும் முனிவரும் கூடி—என்றும்
சேர்ந்துறை தெய்விக நாடு. 11

போற்றுவம் நாட்டை எக்காலும்—நாம்
போற்றுவம் தெய்வம் எக்காலும்
வேற்றுவர்க் கடிமைநாம் இல்லை—இந்த
மேதினியில் அடிமை யில்லை. 12

நேருவே நீடு வாழி!

(1956)

மேருவென உயர்ந்திட்டாய், கங்கையென
　　விரிந்திட்டாய், மேலோய் எங்கள்
பாரதத்தின் கண்மணியே, பாரெங்கும் ஒளிவீசும்
　　பரிதியே உன்
சீரனைத்தும் போற்றிடுவோம், செந்தமிழால்
　　வாழ்த்திடுவோம், தேசம் ஏத்தும்
நேருஎனும் பேரோனே, நேரில்லாப் பெரியோனே
　　நீணிலத்தில் இனிதேநீ நீடுவாழி. 1

பாரதத்தாய் அரசெய்திப் பாரெல்லாம் மேன்மைபெறச்
　　செய்தாய், பண்பால்
வீரத்தால் நிகரற்றுய், விநயத்தால் நிகரற்றுய்
　　வேற்று நாட்டார்
ஆர்வத்தால் எமைப் போற்றச் செய்திட்டாய்
　　பெருமான்நின் அருமையெல்லாம்
சீரொத்த தமிழாலே பாடிடவும் எளிதோநீ
　　சிறந்து வாழி. 2

அறுபத்தெட் டாண்டிருந்தாய் அமர னென
　　அவனியிலே அண்ணல், எங்கள்
குறைக ளெல்லாம் தீர்ந்திடுக, குவலயத்தில்
　　பாரதத் தாய் மேன்மை ஓங்க,
நிறை செல்வம் பெற்றிந்த உலக மெலாம்
　　துயர் நீங்க, நீயும் எங்கள்
இறைவ னென வாழ்ந்திடுக பல்லாண்டு பல்லாண்டு
　　எந்தாய் நீயே. 3

நாமக்கல் கவிஞருக்கு

(1961)

பூமக்க ளில்சிறந்த தமிழ்மக்கள் நலம்பெறவே
புதுமைப் பாடல்
நாமக்கல் கவியரச, ராமலிங்கப் பேருடையாய்
நன்றே செய்தாய்
நாமார்க்கும் குடிஅல்லோம் எனப்பாடி
ஞால மெலாம் உய்யவைத்த
கோமான்தன் வழிவந்தாய் குவலயத்தில்
பல்லாண்டு வாழ்க நீயே

டாக்டர் ஆனந்த குமாருக்கு

(1958)

பலபல ஆண்டாய் என்னை
வருத்திய பாவநோயைச்
சிலதினம் தன்னில் தீர்த்துப்
புதுவாழ்வு வாழச் செய்தான்
நலமலி குணங்கள் வாய்ந்தோன்
ஆனந்த குமாரன் நண்பன்
புலமைசேர் அறிஞன் நீடு
பூமியில் பொலிந்து வாழி.

தமிழ் எழுத்தாளருக்கு

(1958)

தலையிலே எழுதுகின்றான் பிரமன் என்பார்
தமிழிலே எழுதுகின்றோம் நாம் எல்லோரும்
மலரவனார் எழுதுகின்ற மொழிதான் ஏதோ
மாநிலத்தில் சிறந்த மொழி நமதே யாகும்,
அலைகடல் சூழ் உலகத்தில் ஆதியான
அமுத மொழி மதுரமொழி மொழிகட் கெல்லாம்
தலைமை மொழி தாய் மொழி நம் மொழியே யாகும்.
தரணியிலே நமக்கு நிகர் யாரே அம்மா ! 1

தமிழ்த் தாயின் புதல்வர்கள் நாம் எல்லோரும்
தமிழ் மொழியை ஓங்கிடவே செய்வோம் என்றும்
தமிழரசு நிகரின்றி நிலவச் செய்வோம்.
தமிழர் அறம் உலகமெலாம் பரவச் செய்வோம்.
அமரரென மக்களெலாம் வாழச் செய்வோம்
அவனியெலாம் ஒன்றாக நிலவச் செய்வோம்
சமய குல நிறப்பிரிவை ஒழியச் செய்வோம்
தரணியிலே புதுவாழ்வு நிலவச் செய்வோம். 2

வறுமை யெனும் கொடுமைதனை ஒழியச் செய்வோம்
மக்களெலாம் பெருவாழ்வு வாழச் செய்வோம்
சிறுமைதனை உலகமெலாம் ஒழியச் செய்வோம்
செம்மை நெறி யெங்குமே வளரச் செய்வோம்
அறிவு நெறி, அன்பு நெறி ஓங்கச் செய்வோம்
அநியாயம் என்பதெலாம் ஒழியச் செய்வோம்
மறை வகுத்த பெரியோர்கள் பாதம் போற்றி
வாழ்க தமிழ் வாழ்கவென வாழ்த்துவோமே. 3

சிவனுகித் திசைமுகனுய்த் திருமா லாகி
ஜெகத்தோர்கள் போற்றுபல தேவராகி
அவனியெலாம் ஆண்டருளும் தெய்வம் போற்றி
அனைத்துயிரும் நல்வாழ்வு வாழச் செய்வோம்.
புவியெங்கும் சன்மார்க்கம் ஓங்கச் செய்வோம்
பொல்லாத துன்மார்க்கம் ஒழியச் செய்வோம்
நலமான புதிய யுகம் தோன்றச் செய்வோம்
நமது தமிழ் வாழ்கவென வாழ்த்துவோமே. 4

நேருவே எங்கு சென்ருய் ?

1964

நேருவே எங்குசென்ருய் நேரிலாத் தலைவா எங்கள்
பாரதமணியே மேலாம் பர்வதே உருவமாஞய்
சீரிய குணங்கட் கெல்லாம் உறைவிடமான செல்வா
யாரையே நம்பி வாழ்வோம் இனி எந்தாய் இயம்புவாயே 1

விடுதலைப் போராட்டத்தில் வீரர்கள் தலைவன் ஆஞய்
அடுசிறை ஒன்பதாண்டு அமைதியில் கழித்திட்டாய் நீ
விடுதலை அடைந்தபின் எம் அரசென விளங்கிஞய் நீ
திடிரெனச் சென்றதென்ஞே செப்புவாய் தலைவர்ஏறே. 2

ஊக்கமும் உழைப்பும் மேலாம் உறுதியும்
கொண்ட செல்வா
ஆக்கமே எங்கட்கெல்லாம் பெருகிட அயர்விலாது
தூக்கமேயின்றி நாளும் துணிவுடன் உழைத்திட்டாய் எம்
பாக்கியமான மேலோய் மறைந்ததென் பகருவாயே. 3

ஒருமகள் தன்னைவிட்டு உம்பர் நாடுற்றதென்னே
திருமகள் போல்வளர்த்தாய் திசையெல்லாம்
போற்ற வைத்தாய்
இருபெரும் பேரர் வீரர் இணையிலார் இருக்க நீயும்
கருதிடா தெங்குசென்ருய், கழறுவாய் காதற்கோவே. 4

சூரியன் ஒன்றே கண்டோம் சுடர்மதி ஒன்றே கண்டோம்
மேருவும் ஒன்றே கண்டோம் வியன்கங்கை
ஒன்றேகண்டோம்
நேருவும் ஒருவஞக இருந்தாய் நீ மறைந்தாய் அந்தோ
யாரையே நம்பிவாழ்வோம் எந்தையே இயம்புவாயே. 5

அன்பதே உருவமான ஐயனே உன்னை என்றும்
இன்புடன் நினைந்துவாழ்வோம் எந்நாளும்
மறவோம் எந்தாய்
துன்பங்கள் மிகுந்திட்டாலும் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
நின்பெயர் மறவோம் என்றும் நேருவே நேரிலாயே. 6

நின்பிரிவாலே எந்தாய் நெஞ்சகம் தளர்ந்திட்டாலும்
முன்புபோல் அடிமையாகோம் முன்னவன் துணையினாலே
அன்புடன் நாட்டைக்காப்போம் ஆண்மையோடுலகில்
வாழ்வோம்
உன்பெயர் நிலவிநிற்கும் உலகம் உள்ளளவும் வாழி. 7

பாரதி வாழ்த்து

1964

நாடோறும் ஓங்கிவளர் பாரதியின் நற்புகழை
வாடாத செந்தமிழில் பாடி மகிழ்வோமே

பாரெங்கும் தமிழ் ஓங்கப் பாடிநம் பாரதியைச்
சீரோங்கும் செந்தமிழில் சேவித்துப் பாடுவமே

வீரத் தமிழில் மேன்மைக் கவி பாடி
வீரம் எமக் களித்த மேலோனைப் பாடுவமே

புது யுகத்தின் கவியரசைப் புதுமைத் தமிழாலே
மது மலர் தூவித் தொழுது வாழ்த்தி வணங்குவமே

புது வாழ்வளித்த புதுமைக் கவியரசை
இதமான செந்தமிழில் ஏத்திப் புகழ்வோமே

அறிவே தெய்வமென்ற அமரகவி புகழைச்
செறிவான செந்தமிழில் சேவித்துப் பாடுவமோ

அன்பே சிவமென்ற அமரகவி புகழை
இன்பத் தமிழில் ஏத்திப் புகழ்வோமே

காக்கை குருவியெங்கள் ஜாதி யென்று பாடிய நம்
மாக்கவியைப் பாடி வாழ்த்தி வணங்குவேமே

எல்லோரும் ஓர் குலம் என்று தமிழ் பாடி
நல்வாழ் வளித்த நாவலனைப் பாடுவமே

நாளும் தமிழ் ஓதி நாம் உலகில் வாழ்ந்திடுவோம்
நாளும் தமிழ் ஓசை ஞாலத்தில் ஓங்குகவே

குடியரசு ஓம்பி வாழ்வோம்

குடியரசு ஓம்பி வாழ்வோம்
குவலய மெல்லாம் ஓங்க
நடுநிலை தவறாக் காந்தி
யடிகள் நற்றுணையினாலே
படுகொலைப் போர தின்றிப்
பாரினில் உரிமை பெற்றோம்
விடுதலை உலகமெல்லாம்
ஓங்கிட வேண்டுவோமே !

அன்பறம் ஓங்கி வைய
நாடுகள் அனைத்தும் ஒன்றாய்
இன்புடன் ஒரு நாடாக
ஓங்கிட உழைப்போம் என்றும்
துன்பு சேர் வறுமையின்றித்
தொல்லுல கெல்லாம் என்றும்
நன்பதம் பெற்று வாழ
நாதனை நாடுவோம்

வாழிய பாரதம்

15-8-65

அடிமைகளாய் வாழ்ந்திருந்தோம் பல்லாண்டிங்கு
அமரராம் காந்திமகான் அருளால் இன்று
விடுதலைப்பெறவே பேறமைதி கண்டோம் வியன்
மேலான பெருவாழ்வு வாழ்வோம் என்றும்
கொடிதாகும் வறுமை நிலையிலதாச் செய்வோம்
குலவு சீர் வளங்களெல்லாம் பெருகச் செய்வோம்
அடிமையென்ப துலகத்தில் இலதாச் செய்வோம்
ஆண்டவன் இன்னருளை வேண்டுவோமே !

ஒன்று பட்டிங் குயர்வாக வாழவேண்டும்
உலகத்தில் தலைமையாய்த் திகழ வேண்டும்
கொன்றுபடும் போர்புலையை ஒழிக்கவேண்டும்
குவலயத்தில் அன்பு நெறி வளர்க்கவேண்டும்
பொன்ருத நல்லறங்கள் வளர்க்கவேண்டும்
பூவுலகை பொன்னுலகாய்ச் செய்யவேண்டும்
மன்ருடும் திருவடியை வணங்க வேண்டும்
வாழிய பாரத மென்று வாழ்த்துவோமே

இந்திரா காந்தி வாழ்க

பெண்ணரசி இந்திரையே ! வாழ்த்தி இன்று
பெண்குலத்தின் வெற்றியினைப் பாடுவோம் நாம்
விண்ணில் உறை பாரதியார் மகிழ்ச்சி பொங்கி
மேலான ஆசிகளைப் பொழிந்து நின்றார். 1

கண்ணியமாய் நமதாட்சி நாட்டில் ஓங்கக்
கடவுளின் திருவருளை வேண்டி நிற்போம்
எண்ணரியத் தவப் பயனாய்வந்த செல்வி
இந்திரைக்குப் பல்லாண்டு கூறுவோமே. 2

நேரு மகான் சென்ற வழி
நேர்மையுடன் ஆட்சி செய்வார் நெடிதுகாலம்
சோர்வெல்லாம் போக்கி நாம் துணிவு கொண்டே
தொல்லுலகில் நல்வாழ்வு வாழ்வோமே 3

பாரதமாதேவி திருவடிகள் போற்றிப்
பாரெல்லாம் நல்வாழ்வு வாழச்செய்வோம்
வீரமகள் இந்திரையின் நல்லாட்சி ஓங்க
மேலான இறைவனை நாம் பாடுவோமே 4

பெண்ணரசி இந்திரையின் புகழைப்பாடி
பெண்ணுலகின் வெற்றியினைப் போற்றுவோமே
எண்ணரிய தவப்பயனாய் வந்த செல்வி
இந்திரைக்குப் பல்லாண்டு கூறுவோமே 5

நேருமகான் சென்றவழி சென்று நம்மை
நேரான வழியிலே நடத்திச் செல்வார்
சோர்வுமுதல் புன்மையெலாம் போக்கி இந்த
தொல்லுலகில் நல்லாண்மையோடு வாழ்வோம் 6

வீரமகள் இந்திரையின் ஆட்சி ஓங்க
மேலான இறைவனை நாம் வேண்டுவோமே.

லால்பகதூர் மறைவு

லால் பகதூரே இந்த
நாடெல்லாம் வருந்தச் செய்தீர்.
மாலுமியாக எம்மை மாண்புடன் நடத்திச் சென்றீர்
காலனுர்க் கிரைய தானீர் ஆனீர். கண்ணிலான்
கருணை என்னே ?
மேலதாம் உலகில் நேரு மேலோனைச் சேர்ந்து விட்டீர். 1

உருவத்தில் எளியர் ஆனீர்
உள்ளத்தில் பெரியார் ஆனீர்
கருமத்தில் பெரியர் ஆனீர்
கல்வியில் பெரியர் ஆனீர்
தருமத்தில் குன்று போல்வீர்
தயங்கிட எம்மை வீட்டீர்
அறிவற்ற காலனுர் தன்
கொடுமையெனப் பகருவோமே. 2

நேருவின் வழியில் சென்றீர்
நிகரற்ற பணிகள் செய்தீர்
பாரதப் புதல்வராகப்
பாரெல்லாம் புகழ நின்றீர்
காரியம் முடியும் முன்னே
கைவிட்டுச் சென்றீர் எம்மை
யாரையே நம்பி வாழ்வோம்
எந்தையே இயம்புவீரே. 3

காந்தி

அன்பறம் வளர்ப்போம் வையத்து
அமரவாழ்வு ஓங்கச் செய்வோம்
துன்பமும் துயருமின்றி இம்மானிலத்தில்
இன்பமே சூழச் செய்வோம்
அன்பதே உருவமான
அண்டையவர் காந்தி காட்டும்
இன்ப நன்னெறியில் செல்வோம்
இறைவன் அருளும் மாதே

ராஜாஜி

தென்னாட்டுத் தவப்பயனாய் வந்த மைந்தன்
சேலம் மாவட்டத்து உதித்த செம்மல்
பன்னாட்டு மேலோரும் போற்றும் மேலோன்
பகரறிய மதிநுட்பம் வாய்ந்த மேதை
நம்நாட்டுத் தலைவரிலே தலைவன் ஆனேன்
ராஜாஜி யெனும் போற்றும் நல்லான் வல்லான்
பொன்னான நல்லுரைகள் கேட்டு வாழ்வோம்
புவியில் அவன் பல்லாண்டு வாழ்க மாதோ.

பக்தவத்சலம்

உத்தம குலத்து வந்தோன்
உயர் நல்வாழ்வு கொண்டோன்
பக்தியில் சிறந்தோன் மேலாம்
பண்புகள் பலவும் வாய்ந்தோன்
முத்து ரங்கத்தை யென்றும்
போற்றிவாழ் முதல்வன் எங்கள்
பக்த வத்சலமாம் செல்வன்
பல்லாண்டு சிறந்து வாழ்க.

OFFICE OF THE DIRECTOR OF [illegible]
4 JUN 1975